The Manager
Saiva Siddhanta Publishing Agency, Madras

வேதகழக வெளியீடு 2.

சிறு பிரபந்தங்கள்.

# சத்தி நிபாதக் கோவை.

வேதகழகக் கேள்வி நூலாசிரியர்

சதுர்வேதி, ஸ்ரீமத். சிவத்தியானாநந்த மஹர்ஷி

யவர்களியற்றியது.

1928.

விலை அணா 8.] [Copy Right.

வேதகழக வெளியீடு 2.

சிறு பிரபந்தங்கள்.

# சத்தி நிபாதக் கோவை.

---

வேதகழகக் கேள்வி நூலாசிரியர்

சதுர்வேதி ஸ்ரீமத். சிவத்தியாஞநந்த மஹர்ஷி

யவர்களியற்றியது.

---

1928.

விலை அணா 8.] [Copy Right.

# ஸமர்ப்பணம்.

என் தாயினது குலாசாரத்தை எனக்குத் தெளி
வுபெறவுணர்த்திய கலா விற்பந்நையாகிய
☞ ஸௌ. லக்ஷ்மி
என்னும் மாதுக்கு
இந்நூல் அன்போடு
அர்ப்பணம்
செய்யப்
பெற்ற
து.

---

தாய்—சக்தி, பெற்றதாயுமாம்.

குலம்—பூர்வ உத்தர கௌலங்கள், வைஷ்ணவமுமாம்.

# முன்னுரை.

கோவை என்பது அகப்பொருட்டுறைகளை முறைப்பட விளக்குவதோர் பிரபந்தமாகும். சத்தி என்பது பலம் என்று பொருள்படும் சக்தி என்னும் சொல்லின் தற்பவம் ஆகும். நிபாதம் பதிவு. எல்லாம் வல்ல கடவுளது வலிமை மக்களிடத்துப்பதியும்முறையைத்தமிழ்த்துறைகளின் மூலமாக விளக்கஎழுந்தகோவை இதுவானது பற்றிச் சத்திநிபாதக்கோவை எனப் பெயர் பெற்றது. பரத்தையிற்பிரிவென்னும் வழக்கு தமிழ்நாட்டுக்கழிவழக்காகமாறினமை பற்றியும், ஈசனது சக்தியைப்பெற்ற ஒருவன் இழிந்த வல்லமைகளை மதியானனது பற்றியும் அவ்வதிகாரத்தையே இக்கோவையினின்று இந்நூலாசிரியர் நீக்கினர். மேலும் இக்கோவையைக் களவியல் மணவியல் கற்பியல் என மூவியல்களாகப் பிரித்துக் கற்பியலில் உள்ள துறைகளை முப்பாற்படுத்தது இக்கோவைக்கோர் நவீனமாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் பாகுபாடுகளாற் பகுத்தறியப்படும் ஸ்தலதேவதைகளை இந்நூற்கு அதிதேவதையாகக் கொள்ளாது, ஜாதி மதபேதமின்றி மானிடராய்ப் பிறந்தோரது உள்ளத்தைத்தனது கோயிலாக் கொண்டு விளங்கும் ஏகதேவனது சக்தியையே தலைவியாக உருவகப்படுத்தி அதனைப்பலவாற்றானும் சிறப்பித்துக் கூறியுள்ள பெருமை இக்கோவைக்கே உரியது. தற்கால நாகரீகப்படி எழுந்துள்ள பலவித கலைஞானப் பொருள்களையும் தனித்தமிழ்ச் சொற்கள் கொண்டு விளக்கியுள்ள அருமையும் கருதற்பாற்று. இந்நூல் 1921-ஹுத்தில் தொடங்கப்பெற்றதேனும் மடற்

றிறத்தளவில் நின்றிருந்தது. 1927-லேயே அது மீண்டும் தொடரப்பெற்று 1928-ல் முடிவுபெறலாயிற்று. இந்நூலை வாரப்பிரசுரமாக முதற்கண் பிரசுரித்தது தமிழ்நேசன் பத்திரிகையாகும். பலராலும் விரும்பப் பெற்றதனால் இதனைத் தனிப் புத்தகமாக அச்சிடலானேன்.

தமிழ்த்தெய்வத்துக்கு இதுவும் ஒருசிறந்த அணிகலனாக விளங்குமென்பது ஒருதலை.

எல்லாம் வல்ல இறைவன் இந்நூலைப்படிக்கும் யாவர்க்கும் தனது சக்தியைப் பதிப்பானாக.

வேதகழகம், ரங்கூன்.
1928.

சிவத்தியாநாநந்தமஹர்ஷி.

## தமிழ் நேசன்.

“ நம்மாழ்வார் பாடிய ‘துறையடுத்த விருத்தத் தொகைக்கவி’களையும் மணிவாசகன் சொன்ன திருச்சிற்றம்பலக் கோவையாரையும் ஓதின நாவினுக்கு இச்சத்தி நிபாதக்கோவையும் நல்லுணவளிக்குமெனக் கூசாது கூறுவோம்.”

# சத்தி நிபாதக் கோவை.

## 1. களவியல்.

களவியலில் மூன்று பெரும் பகுதிகளுள— இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம் அல்லது இடந்தலைப்பாடு, பாங்கியிற் கூட்டம் என. இவற்றுள் பாங்கியிற் கூட்டம் மதியுடம் படுத்தல் முதலாகப் பதினொரு பிரிவினையுடையதாம்.

### 1. இயற்கைப்புணர்ச்சி.

காட்சி.

1. மதிமுகம் வாய்ந்திரு கண்மலர் பெற்று மகிழ்வினொரு
சுதிமுகந் தோற்றுஞ் சுவையென வின்பந் துதைந்தெதிரிற்
றுதிமுகங் கூர்தரு செய்யோன் வரையினிற் றூயபுலன்
விதிமுகந் தீட்டிய நல்லுருத் தோன்றி விளங்கியதே.

ஐயம்.

2. மலரோ மலருண் மணமோ மறையவன் வாழ்பதியோ
சிலரோ துறுதலி னுள்ளங் கவர்தரச் சேர்ந்தெழுந்த
வலரோ ருருப்பெறு மவ்வடி வோவுல கத்தனையும்
புலரா தியைத்த வருளோ விதையென் புகல்வதுவே.

தெளிதல்.

3. உலகம் பரவு மொருவன் றிகழ்தரு மோங்கலினிற்
கலக மிடுகயற் கண்ணிமை கொள்ளுங் கனகமணிப்
பலகலி னங்கம் பழகுறு மாதலிற் பார்ப்பவர்தங்
குலகதி கூட்டுறுங் கன்னிகை யென்பது கொள்தாமே.

நயப்பு.

4. கண்ணுக்குப் பண்டிகை யாகு முகத்தது கட்டியனைத்
துண்ணக் குழையாக் கனத்த நகின்முக முள்ளதுபொன்
மண்ணுக்கு மேலும் கவர்ந்து மயக்கும் வளமுறினு
முண்ணெக்குறுவணம்போர்த்தகலையதிவ் வொண்ணுதலே.

உட்கோள்.

5. பங்கே ருகன்சிருட் டிக்கத் திருவோன் பரிந்தெடுக்குஞ்
சங்கோ விடுங்கடற் றுத்திரி யோடதைச் சார்ந்தபொருள்
மங்கா வகைத்தனிக் கோவிற் பரிக்க வழங்குமுளச்
சிங்கா தனத்தவள் கட்கடை யெற்கருள் சேர்த்ததுவே.

## தெய்வத்தை மகிழ்தல்.

6. மலையா மலக மகிழ்விற் கடலுப்பை மாண்பினெடுத்
துலையாச்சுவையினையெய்தியதென்னவிவ்வொண்டொடியா
மிலைவேற்பெதும்பையொடியான்கலந்துண்ணுமெழிலளித்த
விலைபே சறியா விதியையென் போற்றி விளம்புவதே.

## புணர்ச்சி துணிதல்.

7. அண்டங்கள் யாவையுந் தானென நிற்கு மவன்றனது
விண்டங் கொளிபக றீர்ந்த விரவின் விலகியதிற்
கண்டங் கமுகனை யார்தொகை நீக்குமுழ் காலமருள்
பண்டங் கிசையோர் மணமுற வென்பாற் படர்ந்ததுவே.

## கலவி யுரைத்தல்.

8. உள்ளும் புறம்பும் பிரித்தறி யாவகை யொண்டொடியுங்
கள்ளம் புணராக் கருத்துள யானுங் கலந்துறவாய்க்
கொள்ளும்புணர்ப்பின்சுவையினை நூற்றிறங் கொள்ளுமவர்
விள்ளுந் தாமதோ மேதினி வாய்த்தவன் வெற்பிடத்தே.

## இருவயினொத்தல்.

9. உலகைப் படைத்து முணர்வறி யாப்பர னுண்மைவடி
விலகிப் பரந்திட்ட தென்ன விவணல வின்பமது
பொலிவிற் பழகப் பழகத் திரும்பவும் பூரணமாத்
திலகப் பிறைநுத லந்தாஞ் சேரச் செறிவதுவே.

## கிளவிவேட்டல்.

10. சிருட்டிகள் முற்றிலுந் தன்னுட லாயதோர் தேவருள்போற்
றெருட்டு மொழிபெற வேண்டுவ தென்னினிச் *சீயினையும்
வெருட்டு மவயவ மொன்றல பற்பல மேவுமிவ
ளருட்டுறை தோறு மருளுங் குணத்தை யடைந்தபினே.

* சீ, ஸ்ரீ, இலக்குமி.

## நலம்புனைந்துரைத்தல்.

11. உள்ளங் குழைய வெலும்பூ டுருகிட வூற்றெடுத்துக்
கள்ளங் கருதா மனத்தொடு கண்ணீர் கரைபுரள
வெள்ளம் பெருகு மடியவர் பாடிட மேதினியிற்
கொள்ளும் மிவடோள் புரைவே யுளகொலோ கூறுமினே.

## பிரிவுணர்த்தல்.

12. நந்தாக் கிழியோர் பரம தரித்திர னற்காத்து
வந்தா லிகழப் பெறுமோ மடமான் விழிமயிலே
யுந்தா தரத்துனைப் பெற்றுப் பிரிதலு மாற்றுவனோ
சிந்தா குலத்தை விடுவிடு யான்சிதை யாவகையே.

### பருவரலறிதல்.

13. எற்றுக் கயர்கின் றனையுல கீன்றவ ளின்னுருவே
முற்றக் கனிந்துவந் தென்னை யளித்ததை முன்னியன்றேல்
வெற்றுத்தொழில்புரிவோர்போற் பயனிலா வீண்கலையைக்
கற்றுக் கழிந்த திவன்பெரு வாழ்வெனக் கண்டலந்தே.

### அருட்குண முரைத்தல்.

14. இயற்கையிற் றோன்று மிவையெலாமூட்டி யிவற்றெடுமென்
செயற்கையு மொன்றுத் திகழ்தரச் செய்தவத் தேவருளின்
முயற்சியின் வாய்த்துள நம்மிரு வோர்த முயக்கதனைப்
பயிற்சி யுருவகை நீக்கல மோட்டாய் பருவாலே.

### இடமணித் தென்றல்.

15. அண்டப் புறத்தினு மெய்தினு மென்மன மாமிடத்தைக்
கொண்டெப்பெருமையுந்தோய்க்குங்கடவுள் குடியிருக்குங்
கொண்டற் பருப்பத மின்னிடை யேயென் குடிஉளமுன்
எண்தப் புருவகைச் சேர்வது வானபி னெண்ணமெனே.

### ஆடிடத்துய்த்தல்.

16. மாயா மயமெனத் தோன்று முலகை வயக்குமிறை
தோயா வருளொடு தோயும் பணிமொழி தூயவுன
தோயா மகிழ்வினிற் சேடியர் கூட்ட முறுகபினர்த்
தேயா மதியொடு சேர்குவ னின்னைச் சிறுபொழுதே.

### அருமையறிதல்.

17. விட்ட குறையடுத் தெய்திய தென்ன விளங்கிழையைத்
தொட்ட பரிச மடுத்த நலமுஞ் சுவைபெறயா
னிட்டமுறச்சொலும் பெற்றியை யென்றனக்கீந்ததெனின்
மட்டிட் டறியக் கனவோ நனவின் வகையதுவே.

### பாங்கியையறிதல்.

18. சொல்லான் வகுத்துப் பிரித்தார்க ளல்லது சொல்லுதற்கு
நல்லா ரெவரு மியைந்து தெரித்திட நல்கிலளாய்ப்
புல்லார் புரம்பொடி செய்யும் புலவனின் பொறப்பமைந்த
நல்லாள் பணிமொழி யான வியற்கையை நாடினனே.

### இயற்கைப்புணர்ச்சி முற்றும்.

## 2. பாங்கற் கூட்டம்.

### பாங்கனை நினைதல்.

19. தேங்கத விக்கனி முட்புறக் காயாற் சிதைவுபெற்று
வீங்குதன் முற்றின் விழுந்துகல் லாற்றின் மிடைந்திலகு
மோங்கலின் வண்மை யுடையவ னென்னுயி ரொத்தமதிப்
பாங்க னிடம்மிதைக் கூறுவன் பண்பு பழகுதற்கே.

### பாங்கன் வினுதல்.

20. மதந்தோ றுலாவுங் கடவுட் பரிசினை மற்றவன்றன்
இதந்தேர் புலவ ரெடுத்துப் பரப்பெலா மெண்ணிலதா
விதந்தோது நூலின் றுறைவாய் மயங்கி விழுந்தனையே!
நிதந்தோன்று தூலக் குருமொழி யிற்புல னீத்தனையே?

### உற்றதுரைத்தல்.

21 விண்ணே யிடிந்து விழுகினுஞ் சற்றும் வெருவிலதென்
றெண்ணே படுமென வுள்ளஞ் சிறுதுடி யேந்திழையின்
கண்ணே படவழிந் தென்ற னுயர்நலங் கட்டழியப்
புண்ணே படுத்திய தென்செய யானினிப் பூதலத்தே.

### கழறியுரைத்தல்.

22. பெண்ணே யெனும்பெயர் கேட்கினு மேழு பிறவியினு
மொண்ணேனெனுமுனையோதொருசிற்றிடையுற்றிடையிற்
புண்ணே படுத்திய தென்றுரைக் குந்நிறைப் புண்ணியநின்
கண்ணே யிதுவொரு நூதன மாமருட் காட்சியதே.

### கழற்றெதிர் மறுத்தல்.

23. கால முலகமொ டியாவையுந் தோற்றிக் கலந்தவற்றில்
ஞால முதலென நிற்குந் தனிச்சிறு நாயகியைத்
தால மறியநீ கண்டிலை கண்டிடிற் சூழ்வுறவிச்
சூல மொழியினைக் கூறலை யென்னுயிர்ச் சோதரனே.

### கவன்றுரைத்தல்.

24. கருதிய கெட்டுக் கடுநர கெய்தினுங் கட்டழியா
வுறுதி யுடையவு னுள்ளக் குணத்தை யுணர்ந்தவன்யான்
சுருதிகள் போற்றும் பதத்தோ னடியிணை போற்றலர்போற்
பெருகிய துன்பத் திடுகிடை பாலுளம் பேதிப்பதே!

### வலியழி வுரைத்தல்.

25. நிறைசிறி தேனுந் தவறல னூற்றுறை நேடுபவர்
துறையுளயாவையுங் கூறுவன் சொற்றுறைக் கூற்றெடுத்துத்
தறைசிறி தேனு மறிகில தென்மதி தாழ்ந்ததெனப்
பிறைபடு தூநுத லென்வலி முற்றவும் பேர்த்ததுவே.

### விதியோடு வெறுத்துக் கூறல்.

26. என்னைப்படைத்தெனக்கெண்ணுறநிற்குமிவ் வேந்திழையைப்
பின்னைப் படைத்த விதியினை யானும் பிழைபடவே
பன்னிப் பலப்பல சொல்லுவ தன்றிப் பழுவினையை
முன்னிட் டிவணுறு மூழை வெறுக்கவு முன்னினனே.

### பாங்கன் நோந்துரைத்தல்.

27. குற்ற மடியவர்க் கண்ணுறி னன்னதைக் கோதிலொரு
நற்றவ மாக்கு மிறைவன் குணமென நாடிவருஞ்
சிற்றிடை யின்னவள் காதலி னென்றுஞ் சிதைவறியா
வெற்றறி வென்கொ னிலைகெட விங்ஙனம் விட்டதுவே.

### இ. லிடங்கேட்டல்.

28. உண்பே ரறிவு முனையிவண் டேற்று முலகறிவி
னென்பே தமையையு மென்னென யானுனை யித்துணையுங்
கொண்பே துறச்செயுங் கோதை யியலுங் குறியிடமு
முன்பே கழறு யுனக்குறு திப்பயன் மூளுறவே.

### இயலிடங்கூறல்.

29. மூலப் பகுதி யொழித்துக் கடந்து முரணறயான்
மேலைப் பதியை யடைந்து தரிசிக்க மேவியநாள்
சீலச் சிறுமியை ஞாலப் படைப்பின் சிறப்பொழுகுங்
கோலக் குயிலினைக் கண்டே னதுவென் குலவிளக்கே.

### வற்புறுத்தல்.

30. மயிலி னியலு மரையின் விழியு மருவுமொரு
குயிலின் குரலுங் கலந்து மகரங் குழைதடவு
மியலி னவளை யிறைநண்ப சென்றறிந் தெய்துவல்யான்
அயலி னுறுபசுக் கூட்டங் கதழ்வுட னுடிடத்தே.

### குறிவழிச்சேறல்.

31. புத்திக் கறிவரி தாயபி ரானருள் போதருமிவ்
வுத்திக் கடைநெறி சென்றெதிர் தோற்று முலகவர்தம்
பத்தித் துறைபடிந் தாடி வருமோர் பதமதனில்
முத்திப் பயன்றரு சீரிழை மேவு முறையுளதே!

### குறிவழிக்காண்டல்.

32. கன்னி யெனுமுரு விதுவே கருதிய கால்களிவை
முன்னி யுரைபெறு மந்திரந் தோற்றிய மூதறிஞர்
பண்ணுங் குறியிது வாலிப மீளுறும் பண்புதரும்
பொன்னிற் றிகழ்தரு மேனியு மின்னது போற்றிடவே.

### தலைவனை வியந்துரைத்தல்.

33. காமுக ராயவ ரேமுற வின்பக் களியதனிற்
பேமுற வாழப் பிழையுற வாட்டிப் பிதற்றுருடுபஃ
றேமுற வீர்த்திடு மாயை துலங்குமித் தூயவளைச்
சேமுற வெய்தி யெனக்குரைத் தோனனி சீரியனே.

கண்டமை கூறல்.

34. தன்னைப் புணர்ந்து பிரிந்த மகிழ்நனைத் தானினைந்து
மின்னைப் பொருவிடை யோடு துவண்டு மெலிந்து நடந்
துன்னைப் பொருவிய கொள்கொம் பெதிர்நோக் குளத்தொடுமப்
பின்னைச் சதிரிச வல்லிகண்டே னொரு பெண்ணெனவே.

செவ்வி செப்பல்.

35. முகிலுள தேயதன் கீழுற முல்லை முகமுளதே
நகிலுள தேமலை யென்னு மதன்கீழ் நகருளதே
யகலிடமென்ன வகன்ற பெருவெளி யங்குளதே
துகிலிடைக் காணு மரம்பையு மங்கு துலங்கியதே.

அவ்விடத்தேகல்.

36. அகப்பகை செற்றுப் புறப்பகை யாவு மகற்றியருள்
மிகப்பதி வுற்றிரு வாதனை தீர்ந்துயர் மேனிலையாஞ்
சகப்பதி வாழுஞ் சமரச ஞானச் சகத்தவர்தம்
அகப்பதி கூடு மரிவை யதுவென தாருயிரே.

பாங்கற் கூட்டம் முற்றும்.

## 3. இடந்தலைப்பாடு.

மின்னிடை மெலிதல்.

37. கண்மணி யேயுனை யென்றும் பிரியேன் கவலலென
விண்மணி காண வுரைத்தவ ரின்று விழைந்தெனது
கண்களி கூர வருவர்கொல் காண்பவர் கண்கவரும்
வண்சுனை யோடுவிண் டாவிய தாரு வளரிடத்தே.

பொழில் கண்டுமகிழ்தல்.

38. தோகை பயின்று பெரும்பூ தாங்கள் சுவையினமைந்
தோகைக் கடலினில் யானுற வீரொளி யுற்றுமதன்
சாகைப் பொருளெலாந் தோற்றப் பலவுயிர் தாங்கியரு
ளீகைப் பொழிலிது சேயிழை யென்ன விலங்கியதே.

தளர்வகன்றுரைத்தல்.

39. சிட்டித் தொழிலைப் புரியார் சிறப்பொடு சிட்டியினைத்
திட்டத் துறமகிழ்ந் தோம்பலர் தீர்ப்பவை தீர்த்தல்செயார்
வட்டத் துயிர்கட் கருளார் மறைப்பை வளர்க்கறியார்
இட்டத் திவர்வெறும் பாவையி னின்றன ரெண்ணமெனே.

மொழிபெற வருந்தல்.

40 விண்ணும் புவியுடன் வேறுள நாட்களும் வெங்கதிருந்
தண்ணம் புலியொடு கோள்பிற வானவுஞ் சார்ந்தவையும்
பண்ணும் பரையென வென்மனத் தையம பாரததன்றே
யெண்ணுந் திருமொழி யீவா யருணிறை வெய்துதற்கே.

### நாணிக்கண்புதைத்தல்.

41 தமதே மதமெனச் சாதித்து நின்று சதிபலசெய்
தெமதே யருளெனு மூடத்தி னாழ்ந்தோ ரிழிகதிபோற்
சமனே யிழந்தென தின்னுயிர் நையாத் தரமதனை
நமரே யெனத்தளர் வோட்டி யிடந்தரல் நாண்மலரே.

### கண்புதைக்க வருந்தல்.

42. வேட்டகம் புக்கவர் பின்றொடர்ந் தெய்தா விழைவையுனி
யோட்டகப் * பட்சி மணலிற் றலையை யொளித்ததெனக்
காட்டகத் துன்னிரு கண்ணை மறைத்தனை கற்புறுநின்
பூட்டக வங்கங்கள் யாவு மறைக்கநீ பொற்கொடியே.

* ஒட்டகப்பட்சி, முதனீண்டது, தீக்குருவி.

### நாண்விடவருந்தல்.

43. துன்று முயிர்களைத் தோற்றிய போதினிற் றேய்வுறவே
யன்றுடன் கூட்டிய நாணையவற்றை யளித்துயிர்த்த
மன்றவன் முன்னர் மதிவிதி யோட்டும் வகையெனயா
னின்று விடுவதற் குற்றதை யெண்ணி யிரங்குவனே.

### மருங்கணைதல்.

44. பற்பல நற்றொழி லின்பிற் புரிந்து பகாருளின்
முற்பட நின்று பரம பதத்தினை முட்டியபின்
றற்பட யாமே கடவு ளெனுமவர் தன்மையினின்
வெற்படர் வுற்ற தளிகாள் நெருங்கலிர் வேரியினே.

### இன்றியமையாமை கூறல்.

45. உலகை யடக்கக் கடலைக் கடக்க வுயர்வெளியி
னிலகக் கமனம் புரிவுற வேற்றொரு ரெழிலுடம்புட்
கூலவப் பலவடி வெய்தத் தகுநிலை தோய்கினும்யா
னிலவக் கிளிமொழி யின்றியெந் நாளு மிருக்கிலனே.

### ஆயத்துய்த்தல்.

46. பத்தர்ப் புரக்குங் கடவுட் பொழிலன்ன பண்புடையாய்க்
கொத்தெப் புறமு மொழிந்ததெ னுருயி ரோம்படையிற்
றத்தைக் குழுவுட் புகுதுக தேன்மொழி தாத்திரியென்
கொத்தைக் குலமிக மேம்பட வந்த குலக்கொடியே.

### நின்று வருந்தல்.

47 ஏகாக் கிரத்து நிலைத்த மனத்தி னியைந்தபெரு
யோகாக் கிரகண் ணியர்க ணினைப்பினின் யோகினுநீஇப்
போகாக் கிரவு கோரைப் பொருந்தாப் புணரடிபோற்
றுகாக் கிரவென தின்னுயி ராள்புனஞ் சார்வதுவே.

பொழிலிடைச்சேறல்.

48. என் முயல்வின்றித் தானே யெனக்கரு ளெய்தும் வகை
முன்முயல் வுற்ற பழவினை தந்தது முன்னியினும்
பின்முயல் வுற்றிடின் வாரா ததுவல பேசுளமே
யுன் முயல் வுற்ற படியிப் பொழிலி னெருங்குவனே.

இடந்தலைப்பாடு முற்றும்

## 4. மதியுடம்படுத்தல்.

பாங்கியிடைச்சேறல்.

49. தொடுதற் கினியரி திந்தே மொழியுட ரோத்திரமும்
விடுதற் கரியதாந் தானமுங் கொண்டிவண் மேவரிதாய்
முடுகக் கடவுளின் முற்றிழை யென்னுள முட்டுறவே
கடுகப் புரிந்தன தோழிக்கு யாவுங் கழறுவனே.

குறையுறத்துணிதல்.

50. சாந்தி யளித்துச் சததமு மோங்குறு தானுவினைச்
சேர்ந்து மணம்பெறு நாரென நிற்குந் திரு விவளே
யாந்தன தோழியென் றூக்கின ளாதலி னன்னவள்பாற்
போந்தென தின்னல் முழுவது மின்றே புகலுவெனே.

வேழம் வினாதல்

51. முன்னம் புவனங்கள் யாவையுந் தோற்றி முரண்படவே
யின்னம் பலசட சீவர் களையுயிர்த் தென்னையுமே
பொன்னங் கழல்வழுத் தும்முறை வைத்தவன் பொங்கரினிற்
சின்னம் பலபடு நற்பிடி யுற்றதோ செப்புமினே.

கலைமான் வினாதல்.

52. இலையுண் டெனவெவ ரும்மறி யாப்பா னோர்மலையிற்
கலையுண் டொழுகுறு மான்குழு தன்னிற் கடியவிடந்
தலையுண் டெனவென கம்பின் வடிநுனி தாக்கலுறுங்
கலையுண் டதுவிவ ணெய்திய துண்டோ கழறுமினே.

வழி வினாதல்.

53. கற்றோர் பலருங் குறுகரு சீரடிக் காரிகையை
யுற்றோர் தரவவர் கூட்டு மருளினை யுண்மைமனப்
பற்றோ வுறுமொழிப் பண்பினை யெய்தப் பழகுறுமோர்
நற்றோ *வெதுவதைக் காட்டுக வாலிதி னரியரே.

* தோவு — பாதை, திசைச்சொல்.

பதி வினாதல்.

54. நெறிதா னுரைத்திட நேரலி ராயினு நேமியினிற்
பொறிதா னுரை மகளோடுகிவையிவர் பொற்புறவெண்
குறைசேர் குறித்தகங் கூர வியற்றிக் குலவுமுமே
துறைசேர் தலமெது கூறிற் றவரோ வுரையுமினே.

பெயர் வினுதல்.

55. ஊருஞ் சொலீருய ரூரை யடையு நெறியுறையீர்
தேருங் கடவுள் செயலென வென்றன் றிகழுளத்தே
கூருங் கருத்தை யுரைக்க விடமுங் கொடுக்கலிர் நும்
பேருந் தெரிய விழைந்தே னதுவெனும் பேசுமினே.

மொழிபெருது வருந்தல்.

56. பொய்த்துயில்கொள்பவன் றன்னையெழுப்புதல்போ தருமோ
மெய்த்துகில் போல விரியுந் தழைத்தலை மின்முகிலே
மொய்த்துத் தடவுங் குழைசார் வரையுள மொய்குழலீ
ரெய்த்துத் தளர்ந்தேன் மவுன விரதமென்றேற்றனிரோ?

கருத்தறிவித்தல்.

57. மவுனத் துறும்பொழு தெல்லா வுலகு மருவுதொழில்
கவனத் துறவென காட்டிய மூலக் கருவனைய
புவனப் பகுதியின் வாலிழை ரோணி பொருந்துவதற்
குவமைப் படுதளி ரின்னது வாமோ வுரையுமினே.

இடை வினுதல்.

58. கருப்பெற நின்றவிப் பூதலப் பேரிடங் கண்டபின
ருருப்பெற விண்மணி யாதிய தோற்றிய வோங்கலுறும்
மருப்பெறு கூந்தல் வயங்கு மதிவத னத்திழையீ
ரிருப்பதெங் கேயுரை யீரும தந்தர விட்டிடையே.

மதியுடம்படுத்தல் முற்றும்.

## 5. இருவரு முள்வழி யவன்வர வுணர்தல்.

ஐயுறுதல்.

59. ஐங்காத மோடினும் பின்றொட ருந்நிழ லாமெனவே
பைங்கார் மதகளி றுதிய கேட்டுப் பசுந்தொடியை
நைங்காத லோடு பருகுறு மார்வத்து நாடுமிவன்
கைங்கா ‡ ரியஞ்சிறி தேனு மறிந்திலன் காரிகையே.

‡ கைங்கரியம் இடை நீண்டது.

அறிவு நாடல்.

60. சொல்லள வல்ல விவர்மொழி தேரிடிற் றூயபரன்
புல்லுறு § மையைப் பொழிலுறு சாதனப் போகமெலாம்
மல்லுற வாக்கு மறையினை யாற்றும் வளர்பெருமைக்
கெல்லுறவாடுங் கருத்திவர்க் குண்டென வெண்ணுவனே.

§ மையைப்புல்லுறு பொழிலென்க. மை - மேகம்.

இருவரு முள்வழி யவன்வரவுணர்தல் முற்றும்.

## 6. முன்னுறவுணர்தல்.

### வாட்டம் வினாதல்.

61. கண்கள் சிவக்கக் கனியிதழ் சாலக் கறுக்கநகிற்
கண்க டுடித்திட மார்பகம் விம்மக் கலைநழுவ
வெண்கள் பலவிடத் தேயக் குடைந்த சுனையெதுவோ
* மண்கள் மிகத்திகழ் அண்டத்துவாடும் வயங்கிழையே.

* மண்கள் - பூமிகள்.

முன்னுறவுணர்தல் முற்றும்.

## 7. குறையுறவுணர்தல்.

### குறையுற்று நிற்றல்.

62. கலையைப் படிக்கவோ கற்புறு மாகமங் கற்றிடவோ
சிலையைச் சிறப்பி னுருநினை வின்படி செய்திடவோ
நிலையைத் தெரிக்குஞ் சதுட்டய சாதன நேடுறவோ
அலையைப் பறிக்குஞ் சுரிகுழற் கென்செய வாடுதற்கே.

### இருவர் நினைவு மொருவழி யுணர்தல்.

63. கண்ணுக்குட் பாவை யிவளுரு வாமவன் கண்ணிவடன்
எண்ணுக்கு என்னுன் படிமம் பொருந்திய வின்பதை மி
மண்ணுக் கறிய வுணர்த்து மிவளது மார்புகனத்
துண்ணெக் கிருவரு நின்ற வுளக்குறிப் போர்ந்தனனே.

### இதுவுமது.

64. இயற்கையிற் பூக்தவன் றேயுறும் வாசனை யென்னவிவன்
செயற்கைத் தழையினைக் கண்டவப் போதே திகழுமன
நயக்கற் கிசைந்தது பேசு மிவனுள ‡ நாடியதின்
றியக்கிற் றிரிவன மானைப் பிடிக்கு மெழிற்கருத்தே.

‡ இவனுளம் கருத்து நடியதின்றெனக் கூட்டுக.

குறையுறவுணர்தல் முற்றும்.

## 8. நாணநாட்டம்.

### பிறைதொழுகென்றல்.

65. கூழை முடியாச் சிறுகலை யாத்த குலக்கொடிநீ
யேழை யெனவினி தியானே யுரைப்ப னிரும்பிறவிப்
பீழை யகன்றிட வெல்லா மொருங்குதன் பேருருவா
மாழை பெறக்கொளு மந்திப் பிறையிது வந்திக்கவே.

### வேறுபடுத்துக் கூறல்.

66. சைவலங் காற்றி லலையக் கமலமுந் தத்தளிக்க
ஐவன மௌவற் குறிஞ்சியக் கபோல மறிவித்திடப்
பைவனப் பேய்ந்து பவளம் பொலிவு பறிந்துளா
மைவிளக் கெய்து மணங்கே யுனையிவள் மானுவளே.

சுனையாடல் கூறி நகைத்தல்.

67. தொய்யி லழிவு படவுந் திமிர்சுணந் தூள்படவும்
மெய்யி லெழுதிய கோலம் குலைந்து மெலிவுறவும்
வெய்யி லழுந்திய புழுவென மேனி வெதும்புபடச்
செய்யும் சுனைபெறின் யாரும் குடைந்து திளைகுவெனே.

புணர்ச்சி யுரைத்தல்.

68. மாந்தர்க் கிழுக்க மளிக்கின்ற பாச மறுக்கமுறத்
தாந்தற் கடாட்ச மருள்கின்ற வீசன் றனிமலையிற்
பாந்தட் படாஞ்சிதை யத்தனி யுள்ளுறை பண்பகலக்
கூந்தற் குலைகுலை வெய்தப் பொருந்துமக் கூர்சுனையே?

பாந்தள், உள்ளுறை ஓர் பொருளையே சுட்டியன.

மதியுடம் படுதல்.

69. அறற்கா ‡லிரண்டொடு சீவியக் காலொன் றணைத் தறலாய்ப்
பெறற்பால தாக்கு மிறைகுணம் போலவிப் பெண்ணருளு
முறற்பால னல்லாத காளை யிவன்றனை தொள்ளுயிருந்
திறற்பா லியைந்து மகிழ்வுந் துயருந் திளைத்திடுமே.

‡ அறற்கால் - ஜலவாயு. சீவியக்கால் - பிராணவாயு. அறல் - நீர்.
$H_2O$. Water.

நாணநாட்டம் முற்றும்.

## 9. நடுங்க நாட்டம்.

புலிமிசைவைத்தல்.

70. பசுவொடு பாச மறியாத நற்பதிப் பார்பாப்பிற்
கசிவென வின்றிக் கடுங்கோப வல்லியக் காற்படையா
லொசிவொடு வீழ்த்த வுயிரே யிலனென் றுரைக்கும்வகை
யசைவுற வின்றிக் கிடந்தா னதுவென்ன பாவமதே!

நடுங்கநாட்டம் முற்றும்.

## 10. மடற்றிறம்.

ஆற்றுதுரைத்தல்.

71. அறிந்தோ ரகத்தே யறிவாய் விளங்கி யகமெனுமால்
செறிந்தோர்க்கெப்போதுங்குழப்பநிலையாய்த்தெரிவரிதாய்ச்
சிறந்தோ னுருவெனத் தோன்றுநல் வீரனைத்தேற்றலிரேல்
அறந்தா னொழிந்த நெறியினிற் சீவ னகற்றுவனே.

குழப்பம் - அவ்யக்தம்.

உலகின்மேல் வைத்துரைத்தல்.

72. கதிப்பொடு காரண காரிய வாயிலாய்க் கல்வியெலாம்
மதிப்பொடு கற்ற மதியோர் அருணெறி மாற்றினராய்
விதிப்படி யாகு மெனவொரு மாமடல் வேற்காத்தே
பதிப்பவ ராய்க்கொண்டு பாய்குவ ருட்டடு மாற்றமுற்றே.

தன்றுணிபுரைத்தல்.

73. வேதம் படைத்துக் கலைகளைக் கண்டு வியன்புவியி
னீதம் படைத்த வொழுங்கினை யாற்றி நிதம் விளைபாட்
டேதம் படாமை புரிபவ ராரரு ளில்லவர்போற்
சாதம் படைபனை மிசையெனை யேற்றிற்றோர் சைவலமே.

மடலேறும் வகையுரைத்தல்.

74. போதங் கொளுத்துநற் கல்வி யழிந்து பொருந்தெனையும்
வாதம் புரிந்தருள் செய்யாது நிற்கும் வளையினையும்
ஏதம் பொருந்து முறவினர் பற்பல வெண்ணும்வகைக்
கேதம் பொருந்த வெழுதித் தெருவிடைக் கிட்டுவனே.

அருளா லரிதென விலக்கல்.

75. ஐந்தொழி லாற்று மிறைவன தம்ச மடைந்தவுன
திந்திய முள்ள நடத்துந் துறையினி லேகுறுவான்
வந்து பொருந்துமோ வள்ள லருட் குணம் வாய்ந்தவுனக்
கிந்த நினைவுதான் வந்ததென் னேமட லேறலையே.

மொழிநடை யெழுத லரிதெனல்.

76. கண்ட வுருவம் வரைகுவை யென்னினுங் காண்பரிய
தொண்டைக் கனிவெனுந் தீங்குர லெங்ஙனந் தோய்க்குவைநீ
பண்டை யலவிது ‡ சொற்பதி வுப்பொறி பாரெனினும்
விண்டு* நடை பயில் பாரி னிவணடை விள்ளரிதே.

‡ சொற்பதிவுப்பொறி - Gramaphone * விண்டு - விஷ்ணு, ஈண்டு சூரியன் மேனின்றது.

அவயவ மெழுத லரிதெனல்.

77. சாய லெழுதிநீ கன்னிமைத் தன்மையைச் சார்ந்தவவ
ணேய வவயவ மொன்றல யாவையு நேர்ந்தெழுதி
யாயு மகண்டமே யாய வவள்குறி யாய்ந்தெழுத
வாயின் ‡ எழுபிறப் புந்தொலைத் தேகுவான் மாட்டுவையே.

வாயின் - வாய்த்தால்

உடம்படாது விலக்கல்.

78. நில்லாய் நெடுந்தெரு தன்னின் மடலூர் நினது குறிப்
பல்லாருங் கூந்தற் குரைத்தபி னன்ன வவள் குறிப்பும்
இல்லாய்ந் துரைக்குவ னன்னவ ளொத்தபி னிச்சையுள
தெல்லா நிறைவுறும் யாதுங் குறைவிலை யெண்ணுகவே.

உடம்பட்டு விலக்கல்.

79. கலைக ளறுபத்து நான்கினும் வல்ல கலைமகளின்
றலைகொள் கரங்கூப் பவளடிக் குன்குறை சாற்றலெனு
நிலைகொள் குறிப்புக ளோதியி னேடி நிறுத்தினன்யான்
அலைகொள் அவள்மனத் தன்னசற் றேனு மடைந்திலவே.

மடற்றிறம் முற்றும்.

## 11. குறைநயப்புக் கூறல்.

### குறிப்பறிதல்.

80. வெள்ளங் கரைபுரண் டோடு நதிப்புனல் வெள்ளலரி
கொள்ளுங் கயத்திடைத் தத்து புனத்துறைக் கோவலவர்
துள்ளு மறிமுய லாடு மலைச்சரி தோய்ந்து மயல்
விள்ளு மனத்தொடு நிற்பார் வெளிப்பட விள்ளலரே.

### மென்மொழியாற் கூறல்.

81. வசந்த மிசைய வருமென் றளிர்மலர் வாசமென
விசைந்த வியல்பே யுருவாம் புருட னிவனெனவே
யசைந்த குழலி னணங்குகொ லாய்மயி லானதுகொல்
நிசந்தா னெதுவென தேடிப் பிரிவிலார் நின்றனரே.

### விரவிக் கூறல்.

82 யானே சகிக்கிலன் மந்திக் கொருகனி யென்றெடுத்துத்
தானே யணைத்துக் கடுவன் கனியொடுந் தாங்கியதைத்
தேனே யெனச்சொலி யூட்டிய போதவர் செல்லலினை
மானே யொருமுறை நீகண் டனையெனில் வாழலையே.

### அறியாள் போறல்

83 பொன்மலை*பெற்ற இரிடியம் பளாற்றினம் பொன்முதல
நன்மலைச் செல்வ மெவற்றையு நாடிவங் கம்மதனில்
முன்மலை வுற்றபல் லோர்துயர் யாவையும் பொன்றிவோன்
தென்மலை பெற்றென நம்மு னொருதனிச் சேருவரே.

*பொன்மலை என்றது ஆல்டாய் யூரல் மலைகளே. இரிடியம் பிளாற்றினம் நவீன உலோகங்கள். தென்மலை-பொதியமலை.

### வஞ்சித் துரைத்தல்

84 உலகத் துளகலை யாவையுந் தேர்ந்தவ னுற்றமனக்
கலகத் தினையின்றி மற்றதைக் கண்டிலன் காண்பரிய
திலகத் திருநுதற் பாவா யருளெனுஞ் செய்யதலத்
திலகப் பெருமிறை ஞானத்தைக் காட்டென வேங்கினனே.

### புலந்து கூறல்

85 அருளுக் கழகோ படிறு துணிவ தருங்கலைக
ளிருளிற் புகுத்தினு மீசன் வெளிப்படி னெல்லையிலா
மருளைக் கிழித்து வெளிப்படு மால்மத மானெனநீ
தெருளற் குதவா விடினென் வெறுமொழி தேர்கலையே.

### வன்மொழியாற் கூறல்

86 அறிவே துறையென வாடிய வன்னவ னத்துறையின்
முறிவே பதமெனக் கண்டனன் முற்று மொழிவதேனோ
வெறுவே தனையுற நீயே யவற்கருள் விள்ளலையேல்
நறுவேய்ங் குழலுனக் காமட லேறுற நாடினனே.

மனத்தோடு நேர்தல்.

87 எல்லா மறிந்து மிறைவன் முறையெனு மீதறியச்
சொல்லார் படுந்துய ரென்னவெ னுள்ளந் துகளிலொளி
மல்லார் மதியிழந் தல்லற் படுவதை யென்மனமே
சொல்லாய் பிரம மெனும்பெரு ஞானத் துரைவனுக்கே.

குறைநயப்புக் கூறல் முற்றும்.

## 12 சேட் படை.

தழைகொண்டு சேறல்

88 சீவ ருயிர்ப்புஞ் சடத்தின் வெடிப்புஞ் சிவமெனவே
மேவுந் தகைமையின் மெல்லிழை யிர்யான் விழைந்துதரு
மாவின் றழையினை யேற்கவிர் மற்றெனை மாய்த்திடநீர்
யாவும் படித்துளீ ரிவ்விய லாமோ வியம்புவிரே.

சிவமென்பது ஈசனென்னும் பொருளில் மோனையினிமித்த வந்ததாம்

கோணர்ந்த தழை தகாதெனக் கூறல்

89. வெண்ணெருப் பிட்டதில் வேற்றுப் பொருள்களைவேதித்ததோர்
கண்ணடி போன்றவிந் நற்றழை யிம்மலைக் கண்ணிலதால்
எண்ணுறு மித்தழை யெங்கிருந் துற்றதென் றெம்மவர்க
டிண்ணம் பலப்பல பேசுவ ரேச்செமைச் சேர்குறுமே.

கண்ணாடி இடை குறுகிற்று.

நினைவுகூறி மறுத்தல்.

90 முன்பே யவள் மனம் யாமறியாமை மொழிந்தனன் யான்
பின்பித் தழையை யவடான் மறுத்திடிற் பேதைமையாற்
றுன்புற் றிடவரு முன்னர்க் கலந்தவ ளுளத்தை
யின்பிற் றெரிந்தபி னன்போ டிதனையா மேற்குவமே.

படைத்துமொழியான் மறுத்தல்

91 மெல்லிய வித்தழை மேதக்க தென்ன விரும்புவளே
யெல்லியம் போது மிரவு மதனை யெடுத்தெறியாள்
நல்லிய லத்தழை நன்மைய தேனு நமனுலகத்
தில்லியல் பிற்றென வெண்ணுந் தகைமை யிதற்குளதே.

நாணுரைத்து மறுத்தல்

92 வினையொத் தகன்று மலபக்குவமும் விளைந்தபினர்த்
தனையொத் தொளிரும் பெருமலை நிற்குந் தனிக்குடியில்
நனையொத்த நாண்மலர் மாலையைச் சூட்டினு நாணுபவள்
பினையெப் படியிவ னூதன மாலையைப் பேணுவளே.

### இசையாமைகூறி மறுத்தல்

93 உலகு மதினுறும் வாழ்வும் படிறென வுற்றவர்கள்
சுலவும் படியினை யெண்ணு தகல்வினைத் தோய்வுபெற
விலவின் பழங்காத் திருந்த கிளியென வேய்பவருக்
கலவிவ் வுலகே நிலைபொரு ளாக்கு னலர்தமையே.

### செவ்வியிலளென்று மறுத்தல்

94 காமத் தரங்க மடிக்கடி மோதினுங் கண்முதல
வேமத் துறுப்புக ளெவ்வள வேனு மிரங்கல் செயா
வாமத் திவள்வயி னுந்தமை சேர்த் திடல் வாய்ப்பலநீர்
போமத் திருந்திழை போற்றி வெய்திற் பொருந்துவிரே.

### காப்புடைத்தென்று மறுத்தல்

95 விதிநிய மம்மொரு பக்கற் றடுக்க விதியிழைத்தோன்
கதிபுளொன் றான வமைப்பா டொருபுறங் கட்டையிட
நதிமுத லாயின வோசை யொடுங்க நவில்பொழுதும்
முகிர்வுகொண் டுள்ள தகைமை யறிகபின் முன்னுவமே.

### நீயேகூறென்று மறுத்தல்

96 தன்னுயிர் தாங்குமப் பரிவிற் குருளை தன் றாய் கடுவைப்
பின்னி யதுப்பிரிந் தோரோர் கிளையினும் பெட்புடனே
அன்னுறும் போதகாத் தக்கொரால் போலவத் தூவிழை
முன்னி புனதுளங் கூறுக நீயே மொழிக்திறனே. (பான்

### குலமுறைகூறி மறுத்தல்

97 உள்ளிய வாற்று முறுதியு மூற்றமு முள்ளுவந்து
கொள்ளுந் திறனுங் குவலய வாழ்க்கையுங் கொண்டுளோநீ
யெள்ளிய பூதமு மேழைமை யோடு மியற்கைவயிற்
கொள்ளுறு மூன்றுகுணத்தொழி வும்மிவள் கொண்டவளே.

### நகையாடி மறுத்தல்

வருபவை வாரா தொழியினும் வந்து மருவுறினு
மொருநிலை யாகவுட் கொள்ளு மியற்கையே முன்னிலைமை
திருவுறி னன்றிச் சிறிதும் பெயராச் சிறப்பினதா
லருவரு மிக்குண பேதமெங் கேயொக்க வாடுவதே.

### இரக்கத்தோடு மறுத்தல்.

99 கருமா முகிலொடு விண்மணி வெண்மதி கண்டனைய
வொருமா முதல்வர்க் குளங்கொடுத் தோரி னுருக்குலைந்து
பெருமா வினவிப் பிறங்கா யுதமெனும் பேச்சுமின்றி
வருவார் பிதற்றித் திரிவார் பெரியவர் மாண்புமெனே.

### சிறப்பின்மைகூறி மறுத்தல்

100 இறைவன் படைத்த வகிலக் குவட்டி னிலைமலர்கள்
நறுமென் குணத்திவ ணங்கலங் கொண்டு நகைத்தறியா
வெறுமென் றளிரிது மேலுமென் குன்றின் விளைவதல
பெறுமென் நலங்கண்டு பேசுவ தித்தழை பெற்றபினே.

### இளமைகூறி மறுத்தல்

101 உள்ளக் குழைக்கு மொருவன் குவட்டினி லுள்ளமனக்
கள்ள மறியாச் சிறுமி யவயவங் கண்ணறிய
மெள்ள வெளிவாப் பருவத் திவளொரு பேதையளப்
பிள்ளைக் கெதனையா னெவ்வா றுரைப்பது பேசுகவே.

### மறைத்தமைகூறி நகைத்துரைத்தல்

102 ஏயே யிவளியை யாமை யுரைத்தா ளினியிவளே
யேயா தொழுகுவமென் னுமுட் கோளுட னேய்ந்ததெனே
தாயே யெனுமவ டன்னோடுறவுகொ டன்மையுனக்
காயாய் வருத லரிதெரித் தென்னை யதுவுணரே.

### நகைகண்டு மகிழ்தல்

103 பிறவா வகையெனை யாண்டுகொண் டோன்புவிப் பேரிடத்தி
லிறவா வகையெனைக் காத்தது யாதெனி னேருடையா!
வறமார் கருணைத் தளவ முகையொடுன் னன்பொழுகுந்
திறமார் மொழியுமென் றேபலர் தேர்தாச் செப்புவனே.

### அறியாள்போன்று நினைவுகேட்டல்

104 வாக்குக் கொருமகள் வைய முழுவது மாண்பினுறக்
காக்கற் கொருவள்‡களிக்கைக் கொருவள் கழித்தொழித்து
நீக்கற் கொருமகள் காட்டல் காத்தல் நினைபவளென்
றூக்கைக் குரியவர் பல்லோ ருனதுள மார்வயினே.

‡ ஒருவள்—நூதன வழக்கு.

### அவயவம் கூறல்

105 மூன்றைந்தொ டெண்ணுறு‡மேழுமகளிர்கள் மூதறிவி
னூன்ற மனத்தினிற் றன்னுரு வாக மதித்தவொரு
பூன்ற கொடிச்சி நிரம்பா விளமுகைப் போதனையாள்
தோன்றியெனதெண் கவர்ந்தாள்நினைவெவன்சொல்வதுவே

3 இளை, பாரதி, சரஸ்வதி. 5 பஞ்சசத்திகள். 7 ஸப்தமாதர்கள்.

### கண்ணயந்துரைத்தல்

106 ஈசற் கியான் வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரொன் றகிலத் தவனொளி போன்றவன்மெய்
மூசப் பரிவட்ட மென்ன வெளுத்தவன் மொய்குணம்யாம்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே.

தழை எதிர்தல்

107 கால மறிந்திணங் கிக்கொடுத் தெங்கள் கடுமொழியை
ஞாலந் தனிற்கரு ணாமணின் கன்ப நலமுதலை
யேல வுணர்ந்து ளவண்டு கொடுத்த விதனையெணித்
தால மதிற்கரங் கொண்டனென் கையுறை, காவலனே.

குறிப்பறிதல்

108 தகைமையிலாமை தனியாண்மை யின்மை சகமதிக்கும்
வகைமை யிலாமை வழங்குத லின்மை மனமறியும்
புகைமை யிலாமை யெவற்றினும் புக்குப் புகன்றதொடு
நகைமை யிலாமை நடித்தன ஞானினி யென்செயவே.

குறிப்பறிந்து கூறல்

109 உடற்குண நீங்கி யுயிர்க்குணஞ் சார்ந்தத னோடுநிலா
தடற்குறி கற்றுக் கடவுட் குணமு‡மடைந்தவவர்
விடற்குறித் தல்லாத் தழையிவண் காலவிளைவினுக்குட்
படற்குரித் தாமோ பகருக தூவிசைப் பண்மொழியே.

‡ அடைந்தவவர்-அடைந்தவர்கள் என்னும் பொருட்டு.

வகுத்துரைத்தல்

110 நான்றழை கொண்டன ளாயகி யென்ன நவில்பழியை
யுரந்தனி லெண்ணிடி னென்றலபல்கதியோய்ந்தொழிவான்
சிரந்தனி லூறமு தாடி யுனதடி சேர்ந்தவவன்
றிரம்பெறு பெற்றிமை தேரா தொழிவதுஞ் சீரியதோ?

தழையேற்பித்தல்

111 வீர னுலகினுக் கெய்தருந் தெய்வ மிளிரருளைப்
பாரின் றெழுகுவோர் காணுறக் காட்டியபண்பினவன்
றேரிந் நெறியுல கியாவரு மெய்துவான் செய்ததழை
யோரி னதுபெரி தேலா தகற்ற வுறுவதன்றே.

தழைவிருப்புற்றல்

112 அண்டமும் பிண்டமு மான சராசர மானவள்நீ
கொண்ட முயற்சியிற் றந்த தழையெதிர் கொண்டு அதனைத்
தொண்ட ருளங்கொளும் பூரணந் தோய்தலிற் றேய்த்தனளாற்
கண்டனை யேனுன தெண்ணிறந் தேய்வை கழறலெனே?

சேட்படை முற்றும்.

## 13. பகற்குறி.

குறியிடங்கூறல்

113 நெறியறி யாவிருட் கற்றை சுலவ, நிலமதனிற்
குறியறி விக்கும் மதிகை யறைந்தொரு கன்முளையிற்‡
பிறிதொரு சார்விழக், கன்மம் விலகாப் பெரும்பொழிலிற்
சிறிதொரு நன்மவு னத்தலம் வாய்வது தீதறவே.

முளையின், உவமைப்பொருளது.

ஆடிடம் படர்தல்

114 உலகம் பொழிலெனத் தோய்ந்த மகளே யுலகவர்தங்
கலகமிடுதொழிற் கண்ணெலா நீங்கிக் கடிதினுளம்
இலகும் பெருமாச் சோலையிற் பூப்பறித் தின்னலறத்
திலகம் பொருநுதற் றீர்த்தமு மாடுவஞ் சேருகவே.

குறியிடத்துக் கொண்டுசேறல்

115 கருவிக ணீக்கிக் காணங் கடந்து கலந்தவொரு
கருவையுந் தாண்டிய பிற்றேச காலங் கடந்தமலர்
வெருவில சேரு மவுனந் துதைந்த வெளியதனிற்
றிருவுள காணுதுஞ் சேருக நீணிறச் சேயிழையே.

இடத்துய்த்து நீங்கல்

116 தொழிற்படு நற்சுக மாகிய செம்மலர் தூயகுழற்
கெழிற்படு கண்ணியாச்செய் துகொணர்குவலெவ்விடத்துஞ்
செழுத்தா‡ளம்பதக் கூறு செயாவகை சீருடனிங்
கழுத்தம தாயமர் தேன்வளர் தாரு வடிநிழற்கே.

‡ செழுத்தாளம் வலித்தல் விகாரம். பதக்கு பாதத்துக்கு; குவ்விகுதி சாரியையின்றிப் புணர்ந்தது.

உவந்துரைத்தல்

117 பற்பல் தொழில்புரி நற்பத மிப்பெரும் பாதபத்தின்
தற்ப வடியெனத் தக்க வணஞ்சமைத் தென்னையுந்தன்
முற்படு மௌனக் கருவென வாற்றி முகந்தவொரு
சிற்பங் குயிற்றிய சத்தி யமர்ந்ததித் தேம்பொழிலே.

மருங்கணைதல்

118 செயலற நிற்குங் கொடியிவ டன்மையைத் தேர்கலைநீ
முயறலைக் கொம்பெனு மிட்டிடை வாடு முதலறியாய்
அயலவ ரென்னிவ ணெஞ்செனப் பேசு மதையுணராய்
மயலொடு முன்பொடு முன்னுற வோங்குவை மார்பகமே.

### பாங்கியறிவுரைத்தல்

119 கண்டனை யித்திருக் கோல நினதருட் கண்ணனையா
ளண்டர் துதிபெறப் பன்னிய கோலமாம், ஆகமங்க
ளெண்டவ ருவகைச் சாற்றிய வெல்லா மிழைத்துமெதிர்
கண்டுண ராப்பொருள் விண்ட மடக்கொடி காணுகவே.

### உண்மகிழ்ந்துரைத்தல்

120 உலகவ ரெண்ணுந் தொழில்க ளுஞற்று முடையவனை
விலகு நெறிபடர் வேதிய ரோரும் விதியிலராய்ப்
பலபடப் பேசவு மென்னள விற்பெரும் பண்பையெலா
‡நிலவினள் யானவள் மௌனச் சிறப்பி னிறைந்தனனே.

‡ பிறவினைப் பொருளில்வந்த தன்வினை, நிலவுவித்தனளென்க.

### ஆயத்துய்த்தல்

121 குணங்குணி யென்னப் பிரித்தறி யாமுறை கொண்டநம
திணங்கொரு காலும் பிரிவினை யெய்தா திருங்களியி
லுணங்கிய செய்தி யுவாறி யாவகை யுத்தம நல்
லணங்குக ளாடிடஞ் சேருக வன்பி னரும்பயனே.

### தோழிவந்துகூடல்

122 ஒடுக்கம் பெறுபொழு துற்ற கருவி யொடுக்கமுறீஇ
வடுக்கண் கலங்கக் கலந்த மனத்தின் வகையறியா
திடுக்கண் பலதரக் கைவிரல் சேப்ப விளர்முகைகள்
தொடுக்கப் பறிக்கலை நன்மல ரீண்டியான் றோய்த்தனனே.

### ஆடிடம்புகுதல்

123 இம்மாலை தன்னை யணிந்து நலம்பெற் றிலங்கிழையி
னம்மாத பாடு மகவிடஞ் சேர்க வடிபதைத்துச்
செம்மா துனதுடனையாக வண்ணஞ் சிறப்பினெலாம்
பெம்மான் *திருவுரு வென்னத் தெரிக்கும் பிறைநுதலே.

பெம்மான்—ஈசன் என்னும் பொதுப்பொருளில் வந்தது.

### தனிகண்டுரைத்தல்

124 மவுனச் சிறப்புள மாதுன் னுயிர்வதி கின்றவெம
‡தவனச் சிறுகுடி லார்ந்த குறிச்சி யதனிடத்தே
கவனத் திவள்மொழிச் சேடியர் கூத்தைக் கருத்தினுணர்ந்
*திவனத் துணவெம தில்§அருந் திப்பின ராகுகவே.

‡ அவனம், ஹவனம், அழைப்புமாம், அதிதிகளை வரவழைப்பது.
* இவ்வனத்துணவு எனவிரிக்க. § இல், வழன்றுறைகை, இற்கண்.

### பருவங்கூறி வரவு விலக்கல்

125 பக்குவ முற்ற முறைநீ யறிவை; பலரறிய
முக்குண மொத்த வகையே பகுதி முளைத்தபல
நற்குணக் காளைக டம்மைத் தெரிவுற நாடியிரும்
பொக்கு மயிற்பொறி யூட்டிய செவ்வி யுணருகவே.

### வரைவுடம்படாது மிகுத்துக் கூறல்

126 வானப் பதமெவற் றுந்தெரி யாக்குணம் வாய்ந்தவிவர்
கூனற் பிறைநுத லென்பிற வித்துயர் கொள்ளையிட
நானற் பதத்தைப் பெறுபவகை யென்னை நாட்டியவர்
மீனச் சிறுமி யெனக்குறித் தோதுதல் மேன்மையதே?

### உண்மைகூறி வரைவுகடாதல்

127 உருவே றெடுத்தபஃ றெய்வங்க ளெங்க ளுயர்குரவர்;
அருவே யெனப்புகழ்ந் தறைகின் றனையிதி னுவதெனே!
‡திருவே றறியமெத் தெய்வத் தலத்தொழில் செய்வதினுங்
கருவே யெனவருங் கோலக் கொடுமுடிக் காவலனே!

‡செய்வதினுந் திரு (மேலானது) வேறு அறியோ மெனக. அறியமெனக் குறுகிநின்றது.

### வருத்தங்கூறி வரைவுகடாதல்

128 உந்நிலை யாரு மறியாச் சகத்தி னுறையவுனி
மெய்ந்நிலை யென்றறி யோத வொன்றை மிழற்றுவதாம்
எந்நிலை யுந்தொழி லெந்திறத் தாவதென் றெண்ணுவதாம்
அந்நிலைக் கிந்நிலை யாவ தெணித்துய ராழ்குவனே.

### தாயச்சங்கூறி வரைவுகடாதல்

129 பழுத்த கொடியெனப் பண்புளார் நோக்கிப் பரிந்தனையு‡
மழுத்த முளமக ளுடி யளிக்கவு மன்னதனால்
வழுத்திய நின்வழி வேறு படுதலும் வாய்க்கும்; அறை
எழுத்தி னுனதுடற் கெத்தகைப் பற்றிங் கியம்புகவே.

‡அனை, தாய். அறை, பாறை. உடற்கு, உடல்போல்வாருக்கு.

### இற்செறி வறிவித்து வரைவுகடாதல்

130 ஒழுங்குள பார்க்கங் கடந்திவ் வருஞ்சிலம் போங்குமனம்
விழுங்கும் புதருள சென்று புறம்பே வினையிழைத்திங்
கழுங்கலி லொன்ன வறைந்தா ளிவளனை யாதலின்யாம்
வழங்கும் பலபடி முள்ளத் துறநெறி மன்னலமே.

### தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்

131 கற்பன கற்றுங் கடவுட் குணம்பெருக் காசவரின்
முற்பட ஈங்க முழுவதுங் கண்டு முதல்வர் தம
திற்செறி வெண்ணிப் பிறநெறி யாளரிவ் வேந்திழையைத்
தற்செறி யின்பெனக் கொள்வான் றுணிந்தனர் தாரணிக்கே.

எதிர்கோள்கூறி வரைவுகடாதல்

132 எம்பிய நம்மை வதுவைக்க ணெண்ணி யியம்புகிரே
லும்பியல் போற்றி யொருங்கே யுடைமையெதி ரொன்றியெம
தம்மைய ரையர் வழிபடு போற்றி னணைகுவர்பிற்
றம்பிடை வாழ்வென வெண்ணிய வேதிலர் தாழ்குவரே.

ஏறுகோள்கூறி வரைவுகடாதல்

133 வயப்படை யன்ன வலயவ முற்று வயங்கிழையை
நயப்பொடு கொள்ளென ‡காலொ டிரண்டு நடுப்பகையாம்
வியப்புறு கொம்புகாற் காளை திருத்தி விதிவழியே
பயப்புறு கொள்கைத் தெருவின் விடுத்தார் பயமுறவே.

‡ காமமாதியவாறில் நாலுகால் இரண்டு கொம்புகளை ஏற்றபடி மொழிமாற்றிப் பொருள் கொள்க.

அயலுரையுரைத்து வரைவுகடாதல்

134 முன்னரே மங்கல முற்ற திருவிதை முன்னறியா
தூன்னு மயலவர் நாளை மணவினை தேர்ந்தறியீர்
என்னு மொழிகொடு பேத்துகி றாரவர்க் கெப்படியான்
மன்ன வறைகுவ னீயிவ் வணமுள மன்னிடினே.

தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல்

135 காலங் கதியெனக் கூறுங் கணியினிவ் வேங்கையலர்
மேலும் புணர்த்தி விளைவு முதிர்வை வெளிப்படுத்தி
யாலுங் கணக்கை யறியி னினிநா மகப்புறத்தே
யேலுங் கணக்கிலை கொல்லோ வுயிரென வேந்திழையே.

பகல் வரல் விலக்கி வரைவுகடாதல்.

136 பகலினி யாங்கள் வெளிவர வேலை தெனப்பகர்த
லிகலக் கணியா ரலருற லூட்ட விருந்தினையி
னகலப் பாப்பை யறுவடை செய்குவ ராதலின்யாம்
‡சகலத் தொருதனி காணற் புரிகிலஞ் சற்றினியே.

‡சகலம், சகளம், தோன்றுமிவ்வுடலோடு என்றபடி.

தினையோடு வெறுத்து வரைவுகடாதல்.

137 உலகத் தொழிலெனு மோர்தினை யோம்பி யுவனையடைந்
திலகித் திரிதர லாமென வாற்றிய விவ்வினையு
மலகற் றொருதனைத் தன்பய னோடு மளித்ததுகாண்
கலகப் பெருவினை வானது மூண்ட கணக்கதுவே.

வேங்கையோடு வெறுத்து வரைவுகடாதல்.

138 உகிராற் கிளவல கால மொழித்தொ ருகோடரியாற்
செகுவார்க் கிடப்பெருக் காலம் வருந்தலிற் றேந்திமிசின் ‡
முகிழார் வருமுற் பறிக்கா தொழிந்தன மொய்த்ததினை
வகிரா வகைநமர், என்செய யாமினி வான்மயிலே.

‡ திமிசு, வேங்கை.

இரக்கமுற்று வரைவுகடாதல்

139 ஒன்றைநினைக்கி னதுகட வுட்கிசை வுற்றிடினே
துன்று மிலாவிடிற் றீர்ந்தொழி யும்மிது தோற்றநம
ரன்று விதைத்த பயிரும் புணர்த்தி னகன்றதுநா
மொன்று மிவன்க ணெதிர்ப்படு மெண்ணமு மோய்ந்ததுவே.

கோய்தமைகூறி வரைவுகடாதல்.

140 ஞானம் பொருந்து முமக்குறை யேமினி ஞாலமிசை
யூனம் பொருந்து வினைவறுத் தாகிய தூனமறு
மோனம் பொருந்து குலத்தவர் கூடுறு யோக்கநிலை
வானம் பொருந்து மனக்கண் ணமர்ந்தது வாலிதினே.

பிரிவருமைகூறி வரைவுகடாதல்.

141 தொட்டிற் பழக்கம் விடாதுரப் புங்கதி தோயுலகி
லொட்டிப் பயின்ற சுகங்க †ளிருவியி னெட்டியுறைந்
திட்டத் தெழிற்றுர வீவன, பேயொடு மின்பமுறக்
கிட்டிப் பழகிற் பிரிவரி தென்னக் கிளத்திலினே.

இருவி, கதிர்கடிந்ததாள். சுகம், கிளி.

மயிலோடுகூறி வரைவுகடாதல்.

142 ஆராத் துயர மளப்பா னலர்ந்த வருங்கணியார்
தீராக் கருத்தினித் தீர்ந்தது, யாமும் சிறப்பில் அவை
வாராத் தகுதியை மாற்று தொழுகினம், வார்பொழில்காள்
போர மயில்காள் துணிவெம தின்னதைப் பேசுமினே.

வறும்புனங்கண்டு வருந்தல்.

143 யாவு மொருபடித் தாவுணர் வாலெனை யாட்கொளுமத்
தேவின் பொருப்பிதன் முன்னர்க் கலநல செவ்வியது
மேவின் றுடல்பனிப் பெய்தும் பலதுயர் வெய்திழைத்துக்
காவின் பெருநலந் தீர்வுறச் செய்தவா †கார்ப்புனமே.

செய்தவா, செய்தவாறுஎன்?

பதிநோக்கி வருந்தல்.

144 பேரின்ப மூட்டு மவுனத் தழகெனப் பேசுமிவள்
நேரின்ப வாரிதி மூழ்குந் துறைகள் நெருங்கியுள
ஊரிங்கு நந்தமை யாட்கொண் டளித்தவ ளூரெனினும்
யாரங்கு செல்பவர் யானு மனத்தளர் வெய்தினனே.

(பகற்குறி முற்றும்)

## 14. இரவுக்குறி.

### இரவுக்குறி வேண்டல்.

145 முன்னர்க் கொடுத்த வரத்தையிப் போது முரணறயான்
நன்னர்க் கிளப்பல் நவிலுக நும்மூர் நளியிரவிற்
பின்னற் சடையவள் நல்லரு ளுண்டு பிறங்குநலந்
துன்னற் கியைந்தனன் பேரு ரதனுக்குத் தூமொழியே.

### வழியருமை கூறி மறுத்தல்.

146 நெருப்பா றுருமயிர்ப் பாலமுந் தாண்டி நிமிர்சுழலை
விருப்போடு சென்றுய ராகாச மேகிப்பின் மேவுநிலா
வருப்போடு தோற்றுறு ‡ மாணை கடந்தநி னுயிரமா
மருச்சாரிதழ்க்கம லத்தாரு மில்ல மருவரிதே.

‡ ஆணை, ஆஞ்ஞை.

### நின்று நெஞ்சுடைதல்.

147 பிறவிப் பெருங்கட னீந்தப் பிடித்த பிணையெனநீ
மறவிக் கடலுட் டிளைத்து நிழலிணை வான்பொருளென்
றுறவிற் பிடித்தணை யுன்னரு மிந்நெறி யுற்றவடன்
றிறவிற் கிடைக்கையைச் சேர்வதெவ்வா றிவள்மனமே.

### இரவுக்குறி நேர்தல்.

148 பற்றற்று நெட்டுக்குத் தாநின்ற பார்கள் பலவுதறி
யிற்றிற்றென் றியாரு மறியாப் பதியெலா மெய்தியவை
யுற்றுற்று நோக்கி யவவென் றவற்றை யொதுக்கிநிலை
முற்றுற்ற வெம்மூர் புகுவான் றுணிந்தாய் மொழிவதனே.

### உட்கோள விறைதல்.

149 முன்னோடி யாயொரு மூதாளர் வேத முறையுணரு
மன்னுன் வடிவென வாற்றிப் பலமதமார்ந்தொழுகும்
நன்னு வலருள வும்பதிக் கண்ணே நடைபெறுவ
மன்னு வுரைதர லெம்மாலை யாடை மருமலரே.

### உட்கோண்டு விறைதல்.

150 எம்மா மதமு மொருசத்தி கொண்டே யெழில்குலவ
விம்மா வொளிபெறு மென்னப் பலர்க்கும் விளக்குமெம்மூர்
அம்மா மனிதர்தம் அங்கத் தடைவே யழகுபெற
எம்மாலை சூடுவர் எச்சாந் தணிவ ரியம்புகவே.

### குறியிடங்கூறல்.

151 மதவாளர் யாருங் கடைப்பிடி யென்ன மருவுபிடி
† வதவாள ரான நிலைமாறி யெல்லா மதமுமொரு
சதமான தேவனின் தன்மையைக் கொள்ளுந் தருநிழலில்
இதமாக வவ்வம் மதகரி தூங்கிட மெம்பொழிலே.

† பிடிவதவாளர், பிடிவாதவாளர் இடைகுறுகியது.

இரவுக்குறி பேற்பித்தல்.

152 சிட்டுத் தனது பெடையி னளவளாய்ச் சிறுபொழுதி
னெட்டித் திரியதைக் கண்ட வுயர்மக னுள்ளமழிந்
தெட்டித் துயரொடு சென்றனன் றாக்க மினியவனைக்
கிட்டத் தாமு முளதோ கிளத்துக ‡ கேவலமே.

கேவலமே என்ற புகழ்ச்சிவிளி தனிப்படத் தலைவியாகிய சக்தியை யே விளித்தது.

இரவு வர வுரைத்தல்.

153 அவயவங் காட்டும் புணரிச் சமவெளி யத்திரியென்
§ றுவயம் படுபொரு ளோங்குந் 0 திதியி லுயர் நுழையுட்
டுவயம் படவொளிர் வேங்கைகள் பாயுந் துறுநெறியில்
* அவயம்மெனச்சொலிச்சென்றுன்வருவ னறைவதெனே.

§ உவயம் = உபயம். * அவயம் = அபயம். சக்தியின் மதம் துவிதம், அத்வித மென்றுது ஒன்றே பரம் பொருளெனக் கூறுமானதுபற்றி தன்னைப் பிரித்துக் காட்டுவான் துவயம் படவொளிர் வேங்கைகள் என்றார். 0 திதி = நிலைமை, தன்மை.

ஏதங்கூறி மறுத்தல்.

154 மாறு படுத்து மிருமத சிங்க மொருகரியை
யூறு படுத்து மொருநடை பாதை யுளகணவாய்
வேறு படுத்து முருவறி யொண்ணு மிகுமிருளில்
ஆறு படுத்த லழகோ வறைகுவை யையனையே.

இருமத சிங்கங்கள் சைவமும் வைணவமுமெனக்கொளில் கரி ஸ்மிருதி மதமாம். துவைதம் விசிஷ்டாத்துவித மெனக்கொளின் கரி (யானை) அத்துவிதமாம். கிரிஸ்தவம் இஸ்லாமெனக்கொளின் கரி யூதமதமாம். ஸமயமத வொருமை மேனுட்டுடு செல்லுமாற்றி லிருப்பதாகக் கொள்ளின் இக்கடைசிப் பொருளைக் கொள்ளுக.

குறை நேர்தல்.

155 கற்பாறை மீதுபல் காட்சிகள் காணக் கடிந்தயலே
வெற்பூ டுருவுநீர் வீழ்ச்சியின் வீழ, விரைந்துஅவர்* தம்
மற்பாடு தோன்ற வெடுத்துயிர் காத்தார் வருவரெனிற்
றற்பாடு பார்த்தினி வாளா விருப்பதுந் தன்மையதோ?

* காத்தாராகிய அவர் வருவரெனில் எனக்கூட்டுக.

குறைநேர்ந்தமை கூறல்

156 இயற்கையி னெய்தாப் பொருளை ரசாயன வேற்கைகொடு
செயற்கையி னுற்றக் கலைஞர் திரவியஞ் சேர்த்துவெகு
முயற்சியி னிற்பபோல் யானுன் மனத்தருள் மூளும்வகைப்
பயிற்சியி னிற்றை யெடுத்த சிரமம் பரிப்பரிதே!

### வரவுணர்ந்துரைத்தல்

157 வரையிட் டனவரை யில்லாதனவெனும் வாழ்வெவையும்
உரையிட்ட நடமில நாடி யுறையுமென் றேக்கமொடும்
இரையிட் டெனமரந் தூங்கிய தோகைகள் வீங்கியதங்
குரையிட் டனவுல கெங்கு நிறைந்தவன் குன்றிடத்தே.

### தாய்துயிலறிதல்

158 தினமான நந்தம தாருயி ரூசல் சிறுபொழுது
மனமா டுவதென வாடுவ தஃதை மதகரியோன்
றினமாக் குருவிக ளோலிடக் கோடி றொடித்தெறிநிர்த்
தனமா டுதலென் செவிப்படு கின்றது சங்கடமே.

### துயிலெடுத்துச்சேறல்

159 பேரா யிரத்தினு மே லுடையான்கண் பிறங்குவதென்
றோரா யிரமுடு வானத் தொளிர்தலை யுற்றுநகை
தோரா யிரமுகை யல்லி யலர்ந்தன தேரினவை
சீரா யிரகுண நின்கணுக் கீடோ தெரிகுவமே.

### இடத்துய்த்து நீங்கல்

160 நின்னோ டிகன்ற குவளைக ளின்ன நினதுமலர்க்
¶ கண்ணோ டிணைகுவ வாமோ கனித்துக் கழறுகயா
னுன்னோ தியினுக் கொருதனி யார்புறி யுற்றெடுக்கத்
* தன்னே தெரியுமச் சந்தனப் பாதபஞ் சார்குவனே.

¶ கண்ணோடு, இனவெதுகை. * தன்னே, தனியாய்.

### தளர்வகன்றுரைத்தல்

161 உலகு துயில்பொழு தியோகியர் நற்றுயி லோய்ந்துநன
விலகும் படியென நும்மூ ரடங்கி விழிதுயிலக்
கலக மிடும்பொறி வாட்டி யொடுக்குங் கணக்கினணி
யலகில வார்க்கா தடக்கி யிவணு * மடைந்ததெனே!

*நாம்-முன்னிலையுளப் பாட்டுத்தன்மை முன்னிலைப்பொருட்கண்வந்தது.

### மருங்கணைதல்

162 தலைமை தருங்குணம் வாய்ந்து நின்றனைத் தலைகுனியு
நிலைமையி னூற்றி யிடையொடி யும்வகை நன்குபெருத்
தலைமை கொளும்வண மூச லிடவுள மாற்றுதலோ
கலைமை? அதற்கொரு தாங்கு காநனர்க் காட்டுவனே.

### முகங்கண்டு மகிழ்தல்

163 எண்ணிறந் தெய்திய வின்பத் தழுந்தி யிருந்துயர்நான்
நண்ணு தொளிபெற வென்னிடத் தெய்திய நற்கொடியின்
கண்ணார் முகக்குமு தம்மிவள் யான்அக் கடிமுகையை
யுண்ணு மலர்த்தி யருள்பெற வோங்கு மொளிர்மதியே.

பள்ளியிடத்துய்த்தல்

164 அவ்வியக்த நின்று மகிர்வச னீய வருநெறியி
னிவ்வியக்த முற்ற தெனும்பேர் விலங்க லெழிற்பொழிலி
லெவ்வியக் தமுமுறத் தோன்றினை சாலும்; இனிமகளிர்
திவ்யக் குழுவணைந் தோய்வு பெறத்துயில் சேருகவே.

வரவுவிலக்கல்

165 தாழ்ந்து கடவுட் குணம்பெறு மிந்தியர் சற்குணங்க
ளாழ்ந்து மிளிர்ந்தல கோங்கிய மேட்டிமை யாண்மைகொடு
வாழ்ந்து பெருமிதங் கொள்பவர்ப் பற்றும் மலையதரிற்
பாழ்ந்துய ராழ்ந்து மிடுக்கண் மதித்திலை பண்பலவே.

ஆற்றுவித்தல்

166 உலகங்க ளொன்றல பற்பல தோன்றி யுரையறவே
செலினு மவற்றைச் சிருட்டித்த சேயிழை செம்மையுறச்
சொலுநா லிரண்டொடு டிரண்டு வயதினைத் தோய்ந்தெனது
நலிவை யகற்றுவ ளென்றே யெனதுயிர் நாடியதே.

இரக்கங்கூறி வரைவுகடாதல்

167 உன்னை யடுத்த* வவதா மோங்கி யுனதுதுயர்
தன்னை யடுத்த துயராய்ப் பழங்கண் டருவதெனப்
பின்னை யிவளை யடைந்தது மெய்த்தலம் பெற்றபினர்
என்னை ‡ யளிப்பாய் வயிர்க்குர லின்னவட் கேற்றுகவே.

* அவதரம், அவஸரம், நிலை. ‡ அளிப்பாய், விளி. வயிர்க்குரல், கொம்பு ஓசை. இவன் குறிஞ்சி நிலக்கோலத்தனாய் வந்தது காட்டிற்று

நிலவுவெளிப்படவருந்தல்

168 தன்னுல கத்தனக் கெல்லா நலமுந் தனித்தளித்த
மின்னிவ ளொத்தவ ளோடு மருவி விளங்குசுக
மன்னுவ தற்கொரு கோத்தடை யாயுன் மதிநிலவைத்
துன்னுவித் தாற்றனை சோமா¶ முறையிதோ சொல்லுகவே.

¶ ஸமயை என்னும் தேவி சந்திரகளா மண்டலத் திலிருப்பவளென் பது காட்டிற்று.

அல்லகுறியறிவித்தல்

169 எண்ணில கோடி யினைஞர் மதவெறி யேய்ந்தவராய்ப்
புண்ணிய நன்னெறி யாற்றிப் பொருந்து புகழ்கள்பல
மண்ணிய நற்பத முற்றிர வெல்லா மறைவகுத்து
நண்ணிய தன்மையிற் கூக்குர லிட்டார் நலிவுறவே.

### கடலிடைவைத்துத் துயரறிவித்தல்

170 எரிமலை யோடுபூ கம்ப மறலொழுக் கென்றிவைகள்
திரிபுற வுன்பண் பமைத்தன போலுந் திகழிவள் நேற்
றிரவி னரவமொன் றேனுஞ் செவியுறத் தோர்கிலளாய்
வெருவி யொருசெய § னித்திரை யின்றி விழித்தனளே.

* அறலொழுக்கு ஈண்டு கடனீரோட்டத்தைக் குறித்தது.
§ செயலும் நித்திரையுமென விரிக்க.

### காமமிக்க கழிபடர் கிளவி

171 கலங்கரை காட்டு மொளிகாள் கழிநிறை கண்டகங்காள்
நலங்கரை புட்காள் நவிலும் வலம்புரி § நத்தினங்காள்
வலங்கரை காட்டுறு மேடகங் காள்சுற்று வாய்திறந்து
நிலங்கரை * கொண்டதெ னுற்று யெனீரிது நேர்மையதே.

§ வலம்புரிநத்து என்றது வலம்புரிச் சங்கினை.
* கரைகொளல் - கரைதல், வருந்தல்.

### காப்புச்சிறைமிக்க கையறுகிளவி

172 நித்திய மன்றல் விழவுறு வீதி நெருங்கியபின்
வர்த்திக வென்று மிரவைப் பகலா வயக்குநெறி
யொத்தவை தம்மை மதியா தெமதக முற்றிடினு
முற்றத் துளகுரை ஞாளிகட் கஞ்சி முயங்கரிதே.

### ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி

173 கைக்கொண்ட ஞானந் துணையாக நீபல் காவுறுசார்
மெய்க்கொண்ட நாவிற் கடந்து நமதிடை மேவுறினும்
ஐக்கொண்ட தெய்வமொன் றிம்மலை யுள்ளதிவ் வள்ளிருளி
லுய்க்கொண்ட வெம்முடற் கூரின் வெளிவா லுற்றிலமே.

### தன்னுட்கையாறெய்திடுகிளவி

174 செம்மணி சான்றெனக் கைதை யளித்த செழுமலரின்
செம்மு பாகத் தெழிலா ரமளியிற் சேர்ந்தவவர்
விம்மு பொருடலொ டியான்சேர விட்டவர் மீண்டிவண்
அம்ம வாக்கண் டிலிரோ இரவில், அறைகுவிரே.

### நிலைகண்டுரைத்தல்

175 ஆற்றுத் துயர வளக்க ரமிழ்ந்தினள் ஆவவெனச்
சாற்று தரத்தின் வரம்பு கடந்தகஞ் சார்ந்தனையே!
நோற்றார்க் களிக்கு மிறைவ னெனவுனை நோற்றறியா
வேற்றார் பிறிதுசிந் திக்கின் மடவரல் வீந்தொழிமே.

இரவுறுதுயரங் கடலோடுசேர்த்தல்

176 உள்ளக் கரவி வெணைக்கலந் தாரென துள்ளமெலாந்
துள்ளித் துடிப்பொ டலறிட விட்டவர் தூக்கவுன
தள்ளற் பரப்பி னழுந்திய செம்மணி யாதியவை
கொள்ளைப் படுத்துனை யேய்த்தவ ருண்டோ குரைகடலே.

அலரறிவுறுத்தல்

177 வேட்கை மிகுத்த விளங்கொடி வாடும் விழைவையுனிப்
பூட்கையி னோர்மகன் அன்னாள் மனக்குறை போக்குறவந்
நாட்கை கொடுத்தது நாடி னலராய் நடந்ததின்நாள்
வாட்கை யெடுத்தரு ளீந்தது மம்பல் மருவியதே.

இரவுக்குறி முற்றும்.

முதலாவது களவியல் முற்றிற்று.

# II மணவியல்.

இவ்வியல் சென்ற வியலினைப் போலவே மூன்று பெரும் பகுதி யுடைத்து— (1) ஒரு வழித்தணத்தல் அல்லதுஉடன்போக்கு (2) வரைவு முடுக்கமும் வரை பொருட் பிரிதலும் (3) மணஞ் சிறப்புரைத்தல்—என.

## 15 ஒருவழித் தணத்தல்.

அகன்றணைவு கூறல்

178 முயற்கொம்பு போன்ற பழியும் புகழும் முயன்றுநா
மயற்கொண்டு கூறினே யோங்குக் தகைமைய மாநிலத்தி
லுயக்கொண்டுதேவன் றடுத்தாண்டவன் றுன்பொழிவதின்நீ
அயற்கண்ட தேயத் தகவிற் பழியிவட் காறிடுமே.

¶ ஆண்டவன் றன்பு ஆட்கொள்ளப்பட்டவனது துன்பம்.

கடலோடு வரவுகேட்டல்

179 ஊர்படு மம்ப லுரைப்பவர் கூற்றை யுதைக்கவெனச்
சீர்படு நற்பொருட் பவ்வத் தகன்றவர் செப்பமுற
நேர்பட வுன்வயிற் றூன்றிரும் புங்முறை நேர்ந்தனரோ
கூர்பட வல்லும் பகலும் ஒழியாக் குரைகடலே.

கடலோடுபுலத்தல்

180 நண்டினந் தத்தி நரிக்குழி தோண்டு நறுமணலிற்
கொண்டதன் முத்தினைச் சிப்பியளிக்குங் குணகடலே
அண்டர்கள் போற்ற வரிய வெனதுகை யார்த்தவனோ
பண்டுபோற் பூட்ட வருவார் வரார்கொல் பகாலையே.

அன்னமோடாய்தல்

181 கடலுந் புகன்றிலது அக்கரை நாகங் கழறும்மெனில்
உடல மலர்ந்தும் உரையறு மூங்கையின் உற்றுளதாற்
படலை விரிந்த மறையுறை வெண்ணிறப் பாலனமே!
உடலம் பிரிந்த வுயிரிற் றுறைவர் ஒழிகுவரோ?

தேர்வழி நோக்கிக் கடலொடுகூறல்

182 பொருளை யிழந்தார்க் கதனிலைப் பூட்டும்பொறி தணியின்
அருளை யிழந்தேற் கினி அவர் தேர்நெறி யாற்றுவதாய்
இருளை விலக்கி யிருப்ப திதனைப்பெய் வாற்றினுநீ
மருளி னழிவுறத் தூர்க்கல்கண்டாய் திரை மாகடலே.

தேர்நெறி ஆறன்றொகை.

கூடலிழைத்தல்

183 அகிலத் திருபகு திப்படு சேதன சேதனமாம்
நிகிலத் தினையும் புணர்த்தும் விதிப்படி நேடி, அவை
திகிலற் றணையப் பொருத்துறு கூடற் + றிரு, எனையும்
மகிழ்விற் றுணைவர் முயக்கிற் பொருத்துற மாட்டுவையே?

\+ கூடலாகிய தெய்வமே என்க.

சுடரோடு புலம்பல்.

184 அந்தர மேய பெருங்கட லூர்தி யணைந்துபறந்
தெந்தர நின்றெனை யென்றும் பிரியே னெனப்புகன்று
மந்தண மாக மறைந்தவர் தந்த வளர்துயரம்
முந்துற வோங்கக் கதிரோய் குடகடல் மூழ்குவையே.

அந்தரமேய பெருங்கடலூர்தி என்றது ஆகாயவிமானத்தை. கடல் அந்தரிட்சம் என்பது வேத வழக்கு. 'ஸமுத்ர மிதி அந்தரிக்ஷநாம ஸ-பாடாத்.' என்பது ஸாயணருரை. 'பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு' என்ற நக்கீரர் பிரயோகத்தையும் நோக்குக.

பொழுது கண்டு மயங்கல்.

185 விண்மணி சென்றன னன்னவன் சான்றென மேவினரென்
கண்மணி நோகக் கருங்கட லோடிக் கழிந்தனர்யான்
உண்மணி கோத்த சரடு தெறித்தென ஒண்பொறிகள்
எண்மணி ‡ சோரக் குலைந்துதளர்ந்தனென் என்செயவே.

‡ மணி — அழகு.

பறவையோடு வருந்தல்.

186 விருந்து புறந்தரா தோம்புந் தமிழ்மகார் * மேவியசெம்
பருந்துங் குருவியும் என்துயர் கண்டு பரிந்தெனைமுன்
அருந்துறும் இன்சொலின் என்செலல் மாற்றி யதன்பிறகு
குருந்துகட் கூட்டுந் தொழிலை மறந்த கொடுமையெனே!

* மகாரிடமேவிய என விரிக்க. செலல் - செல்லல், துன்பம்.

### பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

187 "தீது புரியினும் நல்லது செய்யினும் தேடிஎமர்
ஓதும் இனத்தவர் ‡ எப்பொழுதும் உள் உடைந்துதம
மோது துயரொடுங் காப்பார்" எனுமொழி மூளுறஎன்
கோது விரைவற வம்மெனப் பங்கயம் கூப்பும் ¶எலே.

‡ பத்மினி யானதுபற்றிப் பதுமத்தின் பரிவுகண்டு கூறினாள். ¶ எல்--சூரியன்; இரண்டன்றொகை. எல்லேக்கூப்பும் என்றது தற்குறிப்பேற்றம்.

### அன்னமோடழிதல்.

188 தன்னிற் பெரியார் தளர்வுறிற் றன்றுயர் தாங்கரிதாய்
நன்னர்ப் பெருகுறு மென்றறி யாத நடைப்பெடைதான்
இன்னற் படுமென் இடுக்கண் தவிருற வகி உயிர்
அன்னர்க் குரையாது அதன்பதி மேவி உறைந்ததுவே.

### வரவு உணர்ந்துரைத்தல்.

189 புல்லா விடுத்தவர் போனநாள் நின்றும் புகல்வளையும்
எல்லார் துகிலும் இருப்பன வல்ல, எழில்மலர்க்கண்
அல்லா ரொடுபகல் முத்தந் துளித்தன அன்னவெலாம்
சொல்லாய் மதியே தொலேசென்று வந்த துறைவனுக்கே.

### வருத்த மிகுதி கூறல்.

190 இஞ்சியை வள்ளியென் றெண்ணிக் கறித்த இளமுசுவின்
வஞ்சியைப் பற்றிய மெய்த்துயர், அன்னுள் மறுக்கமுறத்
துஞ்சுதல் ஒட்டி நினைப்பு மறப்பறுத் தூண்சுவை தீய்த்
தெஞ்சிய தோமெலா முன்னுற வாட்டு மிவையுணரே.

ஒருவழித் தணத்தல் முற்றும்.

## 16. உடன் போக்கு.

### பருவங்கூறல்.

91 முற்று விளந்தன முற்றின; எம்மோர் மொழி தமது
சுற்றும் அவர்க்கு மணத்திற் கொடுக்கவுந் தோயும்; அது
முற்று முனம்உன தின்மொழித் தோகையை முன்மணந்து
பெற்று யெனிற்பெரும் பேதைமை நீங்கிப் பிறங்குவையே.

### மகட் பேச்சுரைத்தல்.

192 தங்குலம் தம்மினம் என்று தருக்கிச் சரியலசெய்து
எங்கணும் சோம்பி இருக்கும் அவர்இழிபு எய்தும்வகை,
தங்கண ளாக்கிப்பின் தாக்கணங் கோங்குந் தகைமையராய்ப்
பொங்கும் முறையுறப் போதுகின் றூர்பலர் புல்லவரே.

### பொன்னணி வுரைத்தல்.

193 பல் ஆ தரிப்புமொழியுடை யாளைப் பலன்பெறுநர்
எல்லா விரதமும் பூண்டு வரைந்திளங் காப்புமிட்டார்

சொல்ஆர் அணிபல தூக்குகின்றோ மெனச் சொல்லளவின்
அல்லா முரசு மணவினைக் கொத்த அறைந்தனரே.

அருவிலை யுரைத்தல்.

194 தோற்றமுந்தோற்றக்கொடுக்கமுங்காட்டித் தொடக்கறவே
யாற்று மவட்கென் விலையெனக் கேட்டாய்; அவள்குரவர்
சாற்றற் கொருப்படார் சங்கடம் தந்து சழக்கனெனத்
தூற்றத் தலைப்படு மாறுநீ என்ன துணிந்தனையே!

அருமை கேட்டழிதல்.

195 எட்டாத கொம்பினிற் றேனை நயந்து அதை எய்துதற்குக்
கொட்டாவி விட்ட முடவனைப் போலக் கொதிமனமே
கிட்டாத செல்வக் குழவி அவயவங் கிட்டும் நயப்பு
ஒட்டாக நல்வினை தந்து படைப்பதற்கு உன்னினையே.

தளர்வறிந்துரைத்தல்.

196 கானே கழியே கருமண லேயெனைக் காத்தருளும்
மானே எனப்பல கூவி மதிதனை மாய்த்தவளெந்
தேனே யெனநம ராற்றிட வன்னவர் தேகமதைக்
கோனே தழுவிக் குறித்த பயன்றான் குறிப்பரிதே!

குறிப்புரைத்தல்.

197 விட்டுப் பிரிந்தார் மனம் வெடிப்புற்று மிடிகெடும் அம்
மட்டுப் பிரியாத் துயரென நின்று மடுக்குமதைக்
கொட்டத்தனித்தனியென்னையுந்தாயையுங்கொள்குறிப்பின்
ஒட்டித் தழுவினள் கிள்ளையும் பந்தும் உதவினளே.

அருமையுரைத்தல்.

198 கல்லாத புல்ல ரிடைஞான மொன்றைக் கடிதுணர்த்த
வல்லான் எனச் சென்று உடல முழுவதும் மாசுபடப்
பொல்லாத் துயரமுற்ற கணக்கிற் பொருந்திழையை
நல்லாய் கடுஞ்சுரத் தூடுநம் பேரூர் நடத்துவனே!

ஆதரங் கூறல்

199 கடுப்புதைத் தாற்றினுங்கற்கண்டெனும்உறைகண்டனரேல்
எடுப்பென் றதனையெண்ணாது விழுங்கும் இளைஞரின், நின்
அடுப்பொன் றுளதெனின் அன்னாட் கறைபாலாதியவை
தடுப்பொன் றறியா; சுடுசுரம் தண்டளிர்ச் சாலையதே.

இறந்துபாடுரைத்தல்

200 பலபடச் சொல்வதென்? பண்பா! நினது பரிவுகொடு
நிலைபடக் கொண்டுசென் றேகலை யென்னின், நிலைதளர்வுற்
றலைபடக், காவலும் ஊர்அலர் தூற்றலும் அன்பின்உனைத்
தலைபடக் காணுத லின்மையும் கொல்லும் தடையிலையே.

கற்புநலனுரைத்தல்

201 உயிரிற் சிறந்தது நாணே, அதனின் உயர்ந்ததுதான்
செயிரிற் றிருந்திய கற்பென் றுரைப்பர், சிறிது இதனை
மயிரிற்றுறந்த உயிர்மா வெனவுண் மதித்தனையேல்
அயிரிற் படாதுஅவர் பக்கல்எக் காலும் அமருகவே.

துணிந்தமை கூறல்

202 உயிருட னென்றி உடல்நிலைத் தாலன்றி ஓர்கணமும்
செயிர்அற யாக்கைநில் லாதென நன்கு தெளிந்தனன்யான்
மயல்அற என்றும் மகிதலத் தென்துயர் மாற்றினவர்
அயல்உற யான்இனி ஓர்நொடி யேனும் அகல்கிலனே.

துணிவொடுவினவல்

203 உன்நினை வின்படி யுற்றனன் இப்பொழுது உன்னி அவர்
என்நினை வின்படி யன்றி உடன்கொண்டு எலும்பில் உயிர்
தன்நினை வின்றித் தரைபுரள் வெய்ய தலத்திடையே
செல்நினைவுஎன்னைகொல்?செப்பாய்எனக்குஅதைச்சற்று மி(ன்)னே.

போக்கறிவித்தல்

204 அமுதம் தரும்பினும் அன்னது கூடரிது ஆக்கிநமர்
குமுதம் திறந்து குரைப்பவர் மானக் குரவர் இவர்
விமிதம் பொருந்த உனக்[கு]அவர் தம்மை விழைந்தனியார்
அமிதம் படஅவர் பின்னுறல் நன்னலம் ஆகியதே.

விமிதம், விம்மிதம், அதிசயம். அமிதம்பட, வரம்பு
கடந்தமை தோன்ற. குமுதம்,வாய்.

நாணிழந்துவருந்தல்.

205 எத்தனை ஊழி அழிந்து உயிர் தோற்றினும் இந்நிலத்தே
அத்தனை ஊழியும் பெண்என் பிறவி அடாது ஒழிக
சித்தனை என்உயிர் நாணைக் கவர்தரு தேவைஉன்னி
இத்தனை நாளும் வளர்த்தோர்ப் பிரிவுற எண்ணியதே.

துணிவெடுத்துரைத்தல்

206 அன்புற்று ஒழுகிய பாதைகள் யாவும் அலர்ந்தபசும்
பொன்புற் றரைஎனச் சேவடிக் கின்பம் புரிவனவாய்
இன்புற்று உனது தோள் கோத்தவள் ஆக, எதுவரினும்
துன்புற்றுஅழுவதின் றென்னுந்துணிவொடு தோய்ந்தனளே

குறியிடங்கூறல்

207 உள்ள மயக்கும் இருள்வாய்ந்து அடருறும் இவ்விரவிற்
றள்ள வகையிலா வண்ணம்உரைத்தனன் தன்மையின்முன்
கொள்ளும் மதகரி தூங்கிடங் காட்டும் தருநிழலில்
மெள்ள வெளிவரும் இன்னவள் காண விழிப்பின் நிலே.

151-வது செய்யுள் நோக்குக. 113-ம் செய்யுள் குறித்ததும் அது.

### அடியோடுவழிநினைந்து அவனுளம்வாடல்

208 அனிச்சமும் பஞ்சும் முருக்கும்அடிக்கோர் அழி நெருஞ்சில்
துணைப்பக் கடுந்துயர் ஊட்டும் பதஇணை தோய்ந்த இவள்
தனைப் பருங் கற்க ளுறுத்துஞ் சுரத்தே தனிப்படர்க்க
நினைத்தேன் இவளுக்கு நேருவது என் இனி நீள்நிலத்தே!

### கொண்டுசென்றுய்த்தல்

209 எண்ணியார் திண்ணியர் ஆகின் அவர் எலாம்எய்துபவென்
றெண்ணியார் கூறு முறையே உனதுளம் உற்றவளை
அண்ணியள் ஆக்கினன் *ஆகாதவர் இரவுஅள்ளிருளிற்
றிண்ணிய வேலொடு காப்பவர்சேருமுற்செல்க கொண்டே.

* காப்பவராகியஆகாதவர் அல்லது பகைவர் சேருமுன்என்க.

### ஓம்படுத்துரைத்தல்

210 வீழ்பொருள் யாவுமேல் நோக்குற் றகலினும் விண்பயிலும்
காழ்பொருள் காலம் கடந்தொளி காட்டினும் * காமரங்கள்
ஆழ்விழு தாகா யமதுறக் கீழ்மேல் அணைத்துறினும்
வாழ்கெடா வண்ண மளிப்பாய் இவள் நிலம் மன்னவனே.

* கா = சோலை. இவளை நிலத்தே அளிப்பாய் எனக்கூட்டுக.

### வழிப்படுத் துரைத்தல்

211 உள்ளத்து மன்னிய ஒற்றுமை யோடும் ஒருவு அருநும்
கள்ளத் திலாத நடைத்திரு வோடுங் கடிதின் நும்மூர்
வெள்ளத் தடைக, யான் ஆயமும் அன்னையும் அம்பலரும்
கொள்ளத் தகாதன கூறுதல் நின்றபின் கூடுவனே.

### மெல்லக்கொண்டேகல்

212 உன்னடி தாங்கிய இத்தலத் தன்மை உயர்வுபெறீஇ
முன்னரும் சீரிற் றிருந்தியது, இந்நாள் முதல்வியுனைப்
பன்னிய ஆற்றிற் பழகி அடைதரு பண்பதனால்
உன் இயல் என்னக் குளிர்ந்து சுகமெனக்கு ஊட்டியதே.

### அடலெடுத்துரைத்தல்

213 வளைதடி போன்றபீ ரங்கியன்று ஒன்றை மதித்துவிழும்
தளைவெடி குண்டெனி னும் அதற் கஞ்சேன், தடவியவான்
உளைவெடி தீர்க்கும் ஒருகலம் எண்ணலன், உற்றநுமர்
கிளைவெடி கொள்ளினும் நோக்கேன்என துயிர்க்கேவலமே.

வளைதடிபோன்றபீரங்கி Howitzers. பீரங்கியேயன்றுஎன்க.
தளைவெடிகுண்டு = Bomb வானுளை வெடிதீர்க்கும் கலன்
Airship. கேவலமே என்றது தனதுயிரோடு ஐக்கியப்பட்டுநின்ற
சக்தியை, ஈண்டு தலைவியை. 152-ம் செய்யுளையும் நோக்குக.

அயர்வகற்றல்.

214 காலை வருத்துமிக் கல்லதர் தாண்டிக் களிப்பொடு நாம்
பாலை வருத்தமும் பாற்றிநம் இன்பப் பதி புகுவோம்;
மேலை வருத்தமெல் லாமொழிந் தைக்கிய மேதினியிற்
சேலை வருத்திய கண்ணாய் குறையெலாந் தீய்ந்துகுமே.

நெறிவிலக்கிக்கூறல்

215 நீசெல் அருநெறி வேற்றவர் ஓரார்; நெருப்பனபல்,
ஆ!செல் வுழித், துயர் முற்பட ஊட்டுவர், மாதுஉடலம்
பேசு களைப்பினைத் தோற்றுவள்; காலமும் பேதுறுமால்;
காசு கழிந்து ஒளிவந்தபின், காளாய், கடுகுவையே.

கண்டவர் மகிழ்தல்

216 வயதிற் சிறியவள் ஞானத் தொருதனி மாமகளாய்
நயவிற் புருவ நடைபெற நிற்பாள் *நடையழகை
அயலிற் படுமகன் கண்டு தொழுவதை ஆய்ந்தறியின்
மயலிற் பெருவிழவு ஊட்டும் பெருஞ்சுரம் மாய்வதின்றே.

*நிற்பாளது என்க.

வழிவிளையாடல்

217 கண்பெற்ற நற்பயன் கண்டனன் கானிடைக், காரிகையே,
மண்பெற்ற பன்மதத் துன்பெருஞ் சக்தி மருவுவதைப்
பண்பெற்ற நின்மொழிப் பாடலிற் கூறப் பரிந்துஅதனை
விண்பெற்றயான்செவிக்கொள்வேன்கடம்குளிர்மேவுறவே.

நகரணிமைகூறல்

218 தம்பக்க மன்றிய மற்றொரு பக்கத்தைச் சார்ந்து அதனை
நம்பக்க மாக்கலா காதென் றுரைக்கும் *நவிரமதை
எம்பக்க மாக்கிக் கடந்தால் இருவிரும் எண்ணுநகர்
உம்பக்கம் ஆகும்; விரைவிற் சமரசம் ஓங்குவிரே.

*நவிரம் - மலை

நகர்காட்டல்

219 வேலும் சிலுவையும் அம்பிறை புத்தகம் ஆதியவும்
கோலும் * சினகரம் கூடிப் பிடகமும் கோட்டிகொள
ஆலும் சமத்துவ வீதி விரிந்த அணிநகர் அங்கு,
ஏலும் துயர் கெடத், தோற்றுதல்காணாய் இளங்கொடியே!

* கோல், முக்கோல். சினகரமும் என உம்மை விரிக்க.

பதிபரிசுரைத்தல்

220 தெய்வக் குழவித் தலமிது; செப்புமா தர்சநபி
உய்யக் கொளுந்தலம், நூல்தலம், சீவன் உறுதுயரம்
மெய்யிற்படாவகைக்காக்குந்தலம் அவை; மெய்த்தவர்சேர்
தையக் குழுதொலைத் தன்பிற் குலாவும் அரண்உதுவே.

இவ்விரண்டு செய்யுட்களாலும் வைதிக ஆகமிக இந்துமதம், கிரிஸ்தவம், இஸ்லாம், சிக்கியமதம், ஜைநம் புத்தம் என்னும் மதங்கள் கலந்தொழுகும் பெருமை வாய்ந்த திருநகரென்றபடி. தெய்வக்குழவி-இயேசு. நூல், புத்தகம், கிரந்தா ஸாஹிப்-ஸிக்கிய மதக்குறி. அரண், ஞானம்.

### செவிலிதேடல்

221 நாள் இது காறு மொருதீங் குறுவிதம் நல்வகை*காத்
தாள் இது போழ்துகண்காணு தொளிந்தனள்; அன்னவள்நம்
தோள் இது பூண்டு தழுவிய செய்கையும் தொந்த எணக்
கோள் இதுகொண்டதோ தோழீ! கவல்உளப் கொண்டது எனே!

*காத்தாள் செயப்பாட்டு வினைப்பெயர் காக்கப் பெற்றாள் என்க.

### அறத்தொடுநிற்றல்

222 தன்வினை யாட்டினுக் கென்றொரு மாலை தனியிடத்தே
முன்வினை யாட்டின் முனைந்துவந் தோன்பால் மொழிவினவ
உன்வினை யாட்டிற் குயிர்த்தார் உதவின னென்றொருநாள்
மன்வினையாட்டின் அளித்தான், மதிக்கொள வாழ்ந்தனளே.

### கற்புநிலைக்கிரங்கல்

223 குடிப்பெயர் ஓங்க இயற்றிய தன்மை குலப்விளக்கும்
படித்தெனல் ஆயினும் பாலன் *றனக்குப் பரிசலவே;
வெடித்துஎனகூறியென்? வேரித்தொடையலன்மேவி அவன்
அடிக்கொளல் உற்றபின் நன்மை அவற்குஇனி ஆற்றுவமே.

* பாலன், ஈண்டு தலைவியைக் குறித்தது. தொடையலனை மேவியென்க.

### அடிநினைந்திரங்கல்

224 மேடும் குழியும் மிதிபா லும்சுடு வெண்மணலும்
காடும் கடமும் கடக்க நினைந்தனள், காம்பொடுநாம்
*சூடும் பல்குருமுட் கத்திரி ஒத்துத் துயர்விளைக்கும்
ஏடும் சுவடியும் ஒத்த பதத்தினள்; என்னினைவே?

சூடும்-சூட்டுமென் பொருளில் வந்தது. முட்கத்திரி, முள்ளங்கத்திரிப்பூடு. ஏடும் சுவடியும் பாதத்துக்கு உவமைகள். பதத்தினள் நினைந்தனள் என் நினைவோ எனக்கூட்டுக.

### நற்றாய்க்குரைத்தல்

225 சற்றென் காம்வில கித்துயில் சோரினும் 'சாற்றும் அம்மே
உற்றெறங் கிருந்தனை' என்னும் நங்குட்டன் உணர்வுபிறி
துற்றுத் துணிந்துல கோரிய லோம்ப உவந்தனள் நாம்
முற்றுந் தவம்செய் திலம் எலாப் போதும் முயங்குறவே.

### நற்றாய்வருந்தல்

226 ஏதிலார் யாதும் புகலுற எண்ணலர் தூற்றெடுக்கக்
கோதிலார்என்னுமெம் கோக்குடிக்(கு)எவருங்கோதுசொல
வாதிலா நற்றமர் வாழ்கெட்ட தன்மை மதித்துளறச்
சூதிலா என் மகள் நீத்தனள், என்மனம் சோர்கின்றதே?

### கிளிமொழிக்கிரங்கல்

227 சென்றவள் செல்லலைத் தேருத லின்றித் தெளிவுமின்றி
இன்று அனை சென்றனள் என்றனைக்காப்பவர்யார் இனிஎன்
றென்றனை யேமிகக் கூறிக் கிளிஉரை யோட்டும் எனது
இன்தந யைக்கிதை யாரே புகல்வர்? நெஞ் சீர்கின்றதே.

### சுடரோடிரத்தல்

228 தாயைத் துறந்து சுகத்தைத் துறந்து தனியள் ஒரு
பாயற் கடம் கடந்து ஏறப் புகுந்தாள், பரிதி, உன்து
ஆயக்கிரணம் அவள்தனக் கின்பம் அளிப்பதுவாய்த்
தூயப் பதிசெலுங் காறுந் துயரைத் துடைத்துறவே.

### பருவரலெனந்துகவறல்.

229 தன்னிழல் கண்டயர்ப் பின்னொரு வேற்றுத் தனிநிழலென்
றுன்னிப் புடைகவல் கன்னி, உலகறிவு உற்றிலவள்,
துன்னியன் றன்னியல்கண்டு அவற்கு ஆன அரியதுணை
முன்னுற ஆற்றி மகிழும் முழுமதி முற்றினளே?

### நாடத்துணிதல்.

230 கவலுறல் அம்மயான் மின்முதற்*பெட்டகம் காலொளிகொண்[டு]
அவலென மேடென அல்லா மறைப்பென ஆர்ந்த இடம்
இவண் அல விண்ணின் உடுத்தலக் கோட்டலைஎல்லையெலாம்
கவனமோ டோடுவன், தேடுவன் உற்றநம் கண்ணினையே.

*மின்முதற் பெட்டகம் என்றது X Rayயை, Searchlight எனினும் பொருந்தும். உடுத்தலஎல்லை கோள்தலஎல்லை—The region of the stars and the planets.

### கொடிக்குறி பார்த்தல்.

231 வாராய் மறைக்‡கொடி, வேண்டிய ஆனும் வளப்பலியும்
பாராய் தருவேன், பயமென வின்றிப் படிமிசைநீ
தேராய் அருந்தலாம், தன்னுயிர்க்காவலாஞ் சீரியன்என்(று)
ஓரா வகன்றவள் வல்லே வரக்கரைந் தோம்புகவே.

‡ கொடி-காகம், குறிசொல்ல வல்லதானதுபற்றி மறைக்கொடி என்றார்.

### சோதிடங்கேட்டல்.

232 முக்கா லமுமுணர் திப்பிய நல்லொளி மூதறிஞ,
எக்கா லமும்எம் குலவிளக் கெம்மிடம் என்றுஉவகை
மிக்காரும் வண்ணந் திரும்பி மணவினை மேவஎம்வாய்
இக்காலம் எய்துவள்? தெய்வக் குறிபகர்ந்து ஏத்துகவே.

### சுவடுகண்டறிதல்.

233 பூரண மாக்கலந்(து) ஈருடல் பெற்ற புதல்வரைத்தம்
காரணம் தோற்ற வமைத்த முதல்எனக் கண்ணியவர்

ஆரண நான்முறை என்றெணி ஏமாற் றடைவதின் யான்
தாரணி ஓம்பிய பெண்‡ அடியீது; அஃது அவனதுவே.

‡ உலகவர் ஏமாற்ற மடையவரைப்போல் யானும் வளர்த்து ஏமாற்ற மடைந்த பெண்ணினது அடி இது; அது அவனுடைய அடி என்க.

சுவடுகண்டிரங்கல்.

234 பளிங்கு பதித்து அதன் மேலே அரதன கம்பலமிட்(டு,)
அளிந்த மயிர்முனை வாட்டினுந் தாங்கா தவளென, மேல்
எழுந்த மகமலைக் கோபத் தெழிலின் எடுத்து, நடை
தெளிந்து பழகினும் நோமடி காளையின் சென்றதுவே.

குறிப்பு:-- பளிங்கு, கண்ணாடி யல்லது பீங்கானலான படுக்கைக்கல், கம்பலம், ரத்நகம்பலம். அளிந்த மயிர் என்றது அதனது மெதுத்தன்மையைக்காட்ட. மகமல் வழவழப்பான ஓர் கம்பலம். இந்திரகோபப் பூச்சியின் நிறம் போலச் சயல்காட்டுவது 'கோபத்தன்ன தோயாப் பூந்துகில்' என்றார் பிறரும்.

வேட்டமாதரைக்கேட்டல்.

235 திருமோ திரம்முத லாயின நீக்கத் தெரிபழைமை
உருவாம் புலிப்பற் குரலணி ஒண்டொடி உன்னெறிக்கண்
ஒருவா வியபெனொடு பேதைமை நீங்கிய ஓர்கொடிச்சி
கருவேர் அறஅடுத் தோடினள் கண்டாய் கழறுகவே.

திரு - ஸ்ரீ, தாலி; மோதிரம், நவீனமணவணி. புலிப்பல்லைத் தாலியாகக் குரலில் அல்லது கழுத்தில் அணிந்த பெண்ணே என்றனள், மலைநாட்டுப் பண்டை வழக்கை விடாதவளென்பது தோற்ற.

புறவோடு புலத்தல்.

235 முன்பின் அறியா ஒருமக னவன் முன்நடக்க
அன்பின் அவன்மொழி நைப்பின் அகன்றாள்; அடல்புறவே,
இன்பின் உனதுகண் நோக்கியு மொல்லாது இதுஎனநீ
என்புன் மதலையாற் சொல்லா தொழிந்தனை; ஏற்றமதே?

குரவோடுவருந்தல்.

236 மட்டை அசைந்திளங் கால்தரப் பண்முரல் வண்டுகள்நின்
கொட்டைக் குலையருகு ஓவிட நின்ற குரவு, எனது
பெட்டைக் குயில்இச் சுடுசுரம் சென்றவள் பேதுறவும்
இட்டத்து ஒருமொழி சாற்றிலை; ஏரோ இதுஉனக்கே?

விரதியரை வினாதல்.

237 வேதாந்த மோடுசித் தாந்த வுபநிட மேவுபெரும்
நாதாந்த ஞான மறைபல பேசி, இந் நாடறிய
வாதாந்த போதக னும்மெனக் காட்டி, மகளொருத்தி
நீதாந்த மேவும் நெறிக்கண் உடன்வர, நீண்டனனே?

### வேதியரை வினவல்.

239 கருமத் துறைக்கட் பழகுறும் அந்தணீர்! கல்நெறியில்,
பிரமத் தொருதனி ஞானம் பகர்ந்து பலரும் இவன்
தருமத் துயர்மகன் என்ன மலைத்துத் தழுவியுற,
ஒருமத் திளங்குயில் பின்வர உற்றனன் ஓர்ந்தனிரே.

### புணர்ந்துடன் வருவோரைப் பொருந்திவினவல்.

240 வானின்ப மெய்திய மெய்புமைக் கண்டுளன் மகள்வரவே
தானென்று அகமகிழ்வு உற்றனன்; அன்னவள் தன்னைஎனது
ஊனின்பம்அற்றிடக் கொண்டுசென் றேகின ளோடு அவள் தான்,
யானின்பம் எய்துவான், என்பகர்ந் தாள்?உரைவைத்துவிரே.

### வியந்துரைத்தல்

241 மண்ணிழுது ஓட்டும் ‡இரதம் திரும்பிய வாய்இது;மற்(று)
எண்ணும் புலிஎதிர்ப் பட்டதைச் சுட்ட இடம் அது; நம்
பெண் அங்கு ஒதுங்கிப்பயந்து நிலங்கினை பெற்றிஉது;
வண்ணம் பெருத்தோன் திறல் உரை தந்து மகிக்கரிதே.

‡ மண் இழுது - மண்ணெண்ணெ, இரதம். Motor Car.

### இயைபுடுத்துரைத்தல்

242 முதல்ஒன்று அணைந்து முழுப்புவனங்களும் மூட்டுறும்அம்
முதல்என் றுஎணியாம்தொழுதேம்; அவர்கள் முழுப்பாப்பிற்
கிதம்என் றுஉயர்ந்த நெறிசார் கொடுமுடி எய்திஎல்லா
மதமுங் களிப்புற ஆடுறும் நன்மை வகுக்கரிதே.

### மீளவுரைத்தல்

243 நீபோம் முனர் அவர் தேடிய நற்பதி நீளுறுவர்;
‡ஆபோது அவரை அடுத்துத் திரும்ப அழைக்கரிதால்;
மாபோ கியரென வாழ்வோர்த் தடுத்து மறைப்பவர்யார்?
வா, போதலம் உனது இல்உறு மூர்க்கு *மரைக்கொடியே.

‡ ஆபோது - அப்போது முதனீண்டது. *மரை - தாமரை.

### உலகியல்புரைத்தல்

244 தோன்றிய சார்சிறப்பு எய்தார் புலவர்; சுரும்புமலர்
ஆன்ற மணி இவையாதிய தம்மை அணிந்தவர்பால்
ஏன்று புகழ்பெறும்; இதுவே உலக இயல்; இதைவிட்(டு)
ஊன்று கவலையின் ஊங்குசெல் லும்பயன் ஓதுகவே.

### அழுங்குதாய்க்குரைத்தல்.

245 கவலேல் திருவை வளர்த்த செழுங்குணக் காரிகைநீ
அவர்தாம் நினைத்த அருமவு னப்பதி அண்ணுவர்,பின்
தவறேதும் இன்றிய வாழ்க்கை நடத்துவர் தக்கவ(ண்)ணம்;
எவனோ வளர்த்தேன் வளர்த்தேன் எனஉளம வங்குவதே?

உடன்போக்கு முற்றும்.

## 17. வரைவு முடுக்கம்.

### வருத்த மிகுதி கூறி வரைவு கடாதல்.

246 ஊரலர் தூற்ற வுறவோ ரொருசா ருரையறங்கள்
நேரலர் போல நிரப்பக் குரவர்கள் நீயணைந்த
வேரியள் வேறு புறஞ்செலா வண்ண மிகுதிபெறத்
தேரலர் காவல் புரிந்தன ருன்னருள் செய்வதெனே.

### பெரும்பான்மை கூறி மறுத்தல்

247 உலகிய லோரி னுருமை லெனக்கவ ளூற்றதெய்வத்
தலமிது தந்ததென் றுட்கொண்டு முற்றுந் தடுத்தருண்ட
குலமுதல் தன்னை வழுத்தி மனத்தினிற் கோயில்கொடு
நிலமுத லீண்டு வருவேன் அதைநீ நினைந்திலையே.

### உள்ளது கூறி வரைவு கடாதல்

248 திகம்பர மேனிச் சிறுநெறி தேன்றுளி சிந்துமலை
யிகம்பர மென்றெணுவெங்கள் குடிக்கென வெண்ணிலவாம்
உகம்பெறு மானியம்; தேம்புனக் காவல் உறுதொழிலால்;
அகம்பெற லின்றி முகம னுரைத்த லடாததுவே.

### ஏதங் கூறி யிரவு வரவு விலக்கல்.

249 இன்மொழி கூறிவஞ் சிக்கும் பலநெறி யேன்றகடத்
தன்மொழி யானசீ யங்க ளருங்குண ஆம்பலிணைத்
தன்மொழி யாக்குந் துறவிற் றலைநாத் தருக்குள * வேல்
உன்மொழி கொண்டு வருவாய் எமையிடர் உய்ப்பதற்கே.

* வேல் போன்றுகூரிய உன்மொழியோடு எனக் கொள்க.

### பழிவர வுரைத்துப் பகல் வரவு விலக்கல்

250 பன்னா றடிக்கீழ்ச் சலதாம் வில்விடு பக்கமுள
மின்னார் குறிச்சியின் நீபகல் உற்று விளங்குமருள்
என்னா விடைச்சிக் களிப்பது தீரா இளிவரலாய்
முன்னா டுருவ, மொழிச்சிக் குயிர்ப்பழி மூட்டியதே.

### தொழு திரந்து கூறல்

251 உனக்கோர் நமமளிக் கின்றேன் மரையு முரப்பகடும்
தனக்கோ ரிரையென் றரிதிரி யுங்கடஞ் சார்ந்தெமது
தனக்கோதை யுள்ளம் வெடிபடச் செய்யல் தனித்துனையே
மனக்கோ தகலப் பொருந்தோ மெனத்துயர் வாய்ந்தவட்கே.

### தாயறிவு கூறல்

252 காந்தமின் உந்தும் இரதம் தனிப்படக் காரிருளிற்
போந்ததென்றெண்ணி யுருத்து அனை நோக்கினள், புல்லொழுக்கின்
ஏய்ந்தன மென்றே யுணர்ந்தனள் போலும்; இனியுனது
காந்தனை வாரல் மலையிடை யென்று கழறுவெனே.

MARAIMALAI ADIGAL

புறுமேல் வைத்து வரைவுகடாதல்

253 மாடப் புறுவொன் றளித்த கனியினை வாயெடுத்துத்
தேடித் தனதருங் காதற் கொளத்தரச் சேயிழையுங்
கூடித் தனக்கவ் வகைப்பே றெனக்கிலை கொல்லெனமிக்
கோடித் தனித்துப் பெருமூச் செறிந்தன ளூதுலையே *

* ஊது உலையினென இன் உருபு தொக்கது.

காவல் மேல் வைத்து வரைவுகடாதல்

254 ஊருட் டிருட்டுப் பெருத்ததென் றாரவ ரோங்குபல
பேருட் சிறந்த விடலைகள் தேடிப் பிறங்கியதம்
ஊரிற் றனிப்படு காவ லமைத்தார்; ஒலிபறையைத்
தோச் செவிக்கொளும் போதிவள் கண்ணீர் செறிவுறுமே.

பகலுடம்பட்டாள் போன்று இரவு வரவு விலக்கல்.

255 பெற்றிக ளேற்றபிற் பெற்ற நெறியினைப் பேசலாய்
மற்றவை கூறுவோர் மீளா நரகின் மருவுதுயர்
உற்று வருந்துவா ரென்னுங் கணக்கி னொளியிலிர
வற்றுப் புலர்தர வோட்டு மருந்திவ் வரி * யிலதே.

* அரி—மலை, ஏழன்றொகை.

இரவுடம்பட்டாள்போன்று பகல் வரவு விலக்கல்.

256 நையா யிகர்இகம் நேர்வன வற்றை நலக்க அருள்
வையாளி பென்று பகரார் பலவித வாதமெலாம்
செய்யாவொழுகும்நகர்வயின்உன்னருள்சேயிழையாட்(
ஐயா அலராய்ப் பரந்து பெருந்துய ராற்றியதே.

இரவும் பகலும் வரவு விலக்கல்

257 பாலல வற்றைப் பரிந்து தமக்கெனப் பாரினிடைச்
சால வளர்க்குறுந் தன்மையின் நீயிவட் டாகமிகுத்
தேல வருகுவை நற்பகல்; அஃதோர் இரும்பழியா
ஆலும், இரவெனின் வீண்நடை யாக அகலுறுமே

காலங்கூறி வரைவு கடாதல்

258 அயர்ப்பி னொருசுக மாந்தரைப் பற்றி அதன்சுவையை
நயப்புற ஊட்டி மயக்கு மலைக்கண் நளிதருசீர்
வியப்பின் அறிவு கொளுத்தருள் வந்து மிளிர்ந்தது; பின்
அயர்ப்பும் ‡ அறிவினுள் ஒன்றி அரும்பொரு ளாக்குறுமே.

‡ திரோபவ சக்தியின் உண்மை யுரைத்தது.

கூறுவிக்குற்றல்

259 அன்பு மிரக்கமு முள்ள துணத்தோர் அடைந்தவர்தம்
துன்புதந் துன்பென வெண்ணுவர்;உன்றனைத் தோய்ந்தவனுன்
துன்பந் துடைக்கும் நெறியிதற் கோர்நெறி கோய்வனெனில்
இன்பு பெறநா னுரைப்ப ‡ தென்னேயிங் கினியவற்கே.

‡ நானுரைப்பதென் நீயேசொல் என்றபடி.

செலவு நினைந்துரைத்தல்

260 மனமுங் கருவு மொடுங்கி மவுன மருவுறுபோ
தினமும் பொறியு மிடைதடுத் தாலென, எம்மவர்கள்
கனமுந் திருளிடைக் காணின், அவரைக் கலக்கரிதாம்;
இனமுங் கலக்கினும் யாரே யதனை யியம்புவரே?

போலிவழிவுரைத்து வரைவுகடாதல்

261 பெறற்கரு நன்மணி கண்ட குருகதன் பெட்பறியா
துறத்தெறிந் தாலென வுன்னுயிர்க் கின்ப முதவவுல
கிறக்குந் தனையுந் துணைசெய வுட்கொண் டிமைந்தவளைச்
சிறக்கும் பரிசி னமைத்திலை; உன்னலந் தேர்ந்தனையே!

வரைவு முடுக்கம் முற்றும்.

---

## 18. வரைபொருட் பிரிதல்.

முலைவிலை கூறல்

262 கேட்பேன் மகளை மணத்தே குரவர், கிளத்துகஎன்
கேட்பார் பரிசமென் கின்றனை யுன்றன் கிளர்தலமும்
தோட்போர் வலியு மதிப்போர் மதிக்குந் தொகையறிவும்
வாட்போ னயனத் தவட்கொத் திலவேல் மறுப்பர்களே.

வருமது கூறி வரைவுடம்படுத்தல்.

263 பெய்யத் தகுவன பெய்து சிறப்பொடு பேசிமண
மெய்தற் குறுதிர வெய்திற் குடும்ப* வெழிலினிவள்
மெய்யுற் றுறவரி னோரல ரேச்சு மிக,விவள்கண்
மையுற் றுகுக்குறு மாலி பொறுக்காப் பருவமலே.

*இவள்மெய் குடும்ப வெழிலினுறவரின், கருத்தரிப்பினெனக்க.

(c. f. She is in the family way.)

வரைபொருட் பிரிவை யுரையெனக்கூறல்

264 தாய்மார் மதிக்குந் திரவியங் கொண்டு தருவதற்கு
வாய்வான் கலத்தினிற் சென்றுன் மகனென வாளரிக்கண்
தோய்வாட் குரைத்தவ *ளாற்றுவைசோகம்; அதிபெறுமத்
தேய்வாய் மதிபினர்த் தேயா வருமுனர்ச் சேருவனே.

*உரைத்து அவள் சோகம் ஆற்றுவை என்க

நீயே கூறென்றல்

265 இரவிற் பிரியினு மெப்படி நண்பக லென்றுளம்வாட்
டரவிற் றிருந்திழை வாடுதல் கண்டனை; ஆதலின்ஆ
தரவிற் பரிந்து வருட்டி விரைவி னணுகுவனென்
றுரவிற் பெருந்தகை நீயே யவளுக் குரைத்திடவே.

பிரிந்தமை கூறல்;

266 "வருட்டிற் றிகைக்கும் வசிக்கிற் றுளங்கு மனமகிழ்ந்து
தெருட்டிற் றெளியலள் செப்பும் வகையிலை" சீருடான்
குருட்டிற் புகாது கொளுத்து மறிவிலர் கூக்குரலிட்
டுருட்டிக் கடபட மென்பார்க் குருதகி னேடுவனே.

பிரிந்தமை கூறல்

267 பொருள்பொரு ளென்றுரை கூறியகம்மவர் போற்றும்வகை
யருள்பொரு ளுய்க்க வகன்றூ ரகல்விசும் பார்கலத்தின்
இருள்பொரு ளாக மதியா ரெதிரு மிடுக்கணையுந்
தெருள்பொரு ளாக்கிய மேலவர்; இன்பச் சிறப்பிடைக்கே.
மேலவர் விசும்பார் கலத்தின் அகன்றூர் எனக்கூட்டுக.
184-ல் கூறிய ஊர்தியுமிது. மேல் 269 ஐயும் கருதுக.

நெஞ்சோடு கூறல்

268 ஏதம் பயக்கு நெறியினி னீங்கி யினித்தமது
போதம் பலர்க்கும் பயன்படு மாறு புரிவதெணி
நீதம் பொருந்து முறையுளங் கொண்டு நெடுநெறியிற்
பாதந் தொடுத்தவர் காத்தார் நமை,அறி பாழ்மனமே.

நெஞ்சோடுவருந்தல்

269 கண்சென்ற தூரத்துக் கப்பாற் களிப்பொடு சென்றமணம்
விண்சென்ற போதவர் முன்சென்று நின்றது, வெய்யவளி
புண்சென்ற கோலெனப்பற்றித்துயாம் பொருந்தவின் றுளன்
கண்சென்று நின்றுளனை ஆரா வருத்திடைக் கட்டியதே.

வருத்தங்கண்டுரைத்தல்

270 நூதனங் கண்டு பழைமை மறக்கு நொடிலவர்போற்
சாதனங் கண்ட நெறியிற் பொருந்திய தையலுன
தோதனங் கண்ட பொருளையும் வாட்ட வுளங் கொளலர்;
வேதனை கொண்ட மனத்துய ரோட்டுக மெல்லியலே.

வழியோழுகிவற்புறுத்தல்

271 கண்ட தலத்தையுங் கட்டித் தழுவிய காதலையும்
விண்ட மொழியையும் வெட்டெனச் சென்ற விரைவினையும்
கொண்ட மனப்பொருள் கூட்டு மருமையுங் *கூருளத்தே
கொண்டு கலுழலை, யூரவர் கூர்த்தசொல் கூறுவரே.
* அருமையும் இரண்டன்றொகை.

வன்புறையெதிரழிந்திரங்கல்

272 ஆட்டின் வருத்த மறியாத கோனு யலைந்துகிரி
காட்டின் நெறிகனி சென்றூ ரினிமையைக் கட்டுரைத்தாய்
தேட்டி னருநல மேதக்க தாமென்று சென்றவர்பா
லோட்டு மனத்துயர் தாங்கறி யாம லொழிபவர்க்கே.
தன்னையே படர்க்கைப்படுத்தியது. ஒழிபவளாகிய எனக்
குக் கட்டுரைத்தாய் எனக்கூட்டுக.

வாய்மைகூறிவருத்தந்தணித்தல்

273 கால மறிந்து இடன் தேர்ந்து மனிதரைக் கண்டறியிற்
சால வடிமைகொ ளீசன் றலமதிற் சார் உனது
கோல வடிவுகொண்டு உள ளம் நிறைந்தவர் கூறியவை
ஞால மதிற்படி றென்னின், வழுத்தமெய் நாட்டுஇலேயே.

மனிதரை என்றது தன்மை வாய்ந்தவரை என்றபடி. நாட்டு வழுத்த (வேறு) மெய் இல்லையென்க.

தேறுது புலம்பல்

274 நாத னுரைத்த மொழிப்படி யேயதை நாடியுளம்
பேது பெறுவகைப் பறபல தேறுதல் பேசிடினும்
நீத மிலாமன நிச்சய புத்தி நிலைவிடுத்துத்
தீது தருவதென் காலத் தியல்பெனச் செப்புவனே.

காலமறைத்துரைத்தல்

275 வாடும் பயிர்க்குநீர் வேண்டிநம் மையர் மழைபொழியப்
பாடும் பரிசினைக் கேட்டு முழக்கொடு பாரமுகில்
நேடுங் கருவுயிர்த் தோம்பிய தன்மையை நீகருதாய்
வாடுந் திருந்திழை மாரி யெனவுள மாழ்கலையே.

தூதுவர வுரைத்தல்

276 மக்கட் பெருந்தொகை வாடுதல் கண்டுஅவர் மாசகலத்
துக்கத் தொழிவுறத் தன்னருஞ் சக்தி தருமிறைவன்
பக்கத் தொருமகன் றூதென வந்தனன் பாரினுன
தக்கத் * தவரவன் றூனோ பிறனோ வறைகிலனே.

* அக்கத்தவர்—கண்ணுளார், காதலர் என்க. புத்தனையும், முருகனையும், கிருஷ்ணனையும் சேசுவையும் ஸம்மேளனப்படுத்தியபடி. 149, 150-வது பாட்டுக்களில் கூறியதை யுட்கொண்டு நோக்குக. 219, 220-ம் செய்யுட்களையும் பார்க்க.

தூதுகண்டழுங்கல்

277 ஏனையர் விட்டநற் றூதர் வருகுவ ரேகுவாற்,
றேனை யெனக்களித் தெய்தினர் போல வெனையொழிந்த
நானனை யாரெனைத் துன்பக் கடலு ணனைத்துவெளிப்
போனவர் தாழ்த்தனர் காரண மென்னோ பொறுக்கலனே.

மேலிவுகண்டு சேவிலிகூறல்

278 தேகம் விளர்த்துப் பசலைக ளோடித் தெரிவரிய
மோகம் படவிவள் மெய்க்குறி வேற்று மொழிபடவே
ஆகம் மெலிந்தது, தெய்வப் பெருங்கோ ளடைந்தனளென்
றாகம் படத்தெரி கின்றது, யாதும் உரைக்கலமே.

கட்டுவைப்பித்தல்

278 மணிமந் திரமருந் தியாவையுந் தேர்ந்த மதியனை * இப்
பிணியோன் றறிகிலாப் பேதைதன் கொங்கை பிதிர்ந்தனபூ;

தணியுந் தாமிலாத் தாபச் சுரமிவ டன்னையடைந்
தெணியெம் மனங்கொளா வண்ணம் வருத்திய தேத்துகவே

* அனை—தாயே! அண்மைவிளி.

அன்னையே கொங்கைகள் பூவொடு பிதிர்ந்தன; சுரம் இவளை யடைந்து வருத்தியது. காரணமென் சொல்லுக என்க. ஏத்துக, சொல்லுக என்னும் பொருளில் வந்த இவ்வினைக்குமுன் "காரணமென்" என்னும் இடைப்பிறவரலை வருவிக்க.

கலக்கமுற்று நிற்றல்

280 நம்முளத் தோடிய வெண்ணங்கள் யாவும் நாரறிய
இம்மெனத் தோன்றி எமது களவொழுக்கு ஏதிலவர்
தம்மதி சார்வான் புகட்டி, எம்மையன் றனதடியைப்
பொம்மெனக் கொள்ளார் துயர்,எமக் கூட்டவோ போந்ததுவே.

கட்டுவித்திகூறல்

281 காணுக நெல்லினுள் மும்மூன் றெனவதைக் காட்டியபிற்
பேணுக வொன்று முருகின் முடியெனப், பிறிதடியாய்
ஆணுத லோர்க, உவகையே மூன்று யணைவதனை
நீணிலந் தேர்க, முருகணங் கேயிந் நிறைமொழிக்கே.

வேலனையழைத்தல்

282 மாசொன் றறியா வருங்குடி வந்த மயிலிவளைக்
காசு படுத்திய கட்டணங் கேகுவான் கண்டபெருந்
தேசு படைத்தநம் வேலனைக் கூவுக, தெய்வவழி
ஏசு படாவகை வேண்டிய நீதி இயற்றுகவே.

இன்னலெய்தல்

283 சாங்கியம் பண்டைய நன்முறை யென்னத் தயக்கின் நம[illegible]
ஏங்கிய மெய்விளர்ப் பேகிற் றுறைவனுக் கென்பயனும்?
வீங்கிய நோய்நமின் நீங்க விலையெனின் வெற்பினிடத்
தோங்கிய கூத்தின் முடிவதென்? இன்ன லுரைக்கரிதே.

வெறிவிலக்குவிக்க நினைத்தல்

284 வேலன் வெறியயர் வெய்தியும் வெண்மறி மெய்யறுத்துங்
காலன் வசப்படும் வெம்புலை நீக்க,மெய்க் காதலினென்
மேலன் புடையவர்க் காவுறு கற்பின் மெலிவதனை
ஞால மறியா மறையை விளம்புவென் நற்றுணைக்கே.

மெலிவை மறையை ஒரு பொருள் மேலது.

அறத்தோடு நிற்றலையுரைத்தல்

285 அன்னியர் சொல்வன சொல்லுக; அன்றி அடுத்துஉறவோர்
துன்னிய கோபத்தி னென்னை வெறுக்க; துணைவனடி
முன்னிய வன்பரிற் றூய்மையள், சாபம் மொழிவலுனை,
என்னியல் நீயும் முனிக; நிகழ்ந்தது இயம்புவனே.

தூய்மையாளாகிய எனது இயலை நீயும் முனிக எனச்சேர்க்க.

அறத்தோடு நிற்றல்

286 சிறுமனை கோலிமுத் தன்னம் முதலிய செய்தமைத்த
நறுமனை நேடி விருந்தாட் டயர நயந்தவன், என்
குறுமனை யோடென் உடலும் பனிப்பக் கடல்வரு,யா
னுறுமனை தோய்த்தனன் சென்றான் கதிப்பி னொருமகனே.

ஐயந்தீரக்கூறல்

287 காணப் படுவன மெய்யெனக் கொண்ட கடவுளடி
பூணப் படுவதென் றன்பிற் றலைக்கணி பூட்கையன்வாய்
நாணப் படுமொழி கூறு தொழிந்தனை; நம்மனை,தான்
பேணப் படுவதொன் றன்றோ? வலராய்ப் பெருகியதே.

வெறிவிலக்கல்

288 குடங்குடமாகக் குடிப்போர் குடித்துக் குடிகெடுக;
அடம்பட வின்னவ டன்னை யளித்ததோ ளன்றியொரு
தடம்படு தோணி யிவளுக் குளதெனச் சாற்றுவையேல்
நடம்படு வோய்நீ நெறியறி தேவுஅல நாடுகவே.

செவிலிக்குத் தோழி யறத்தோடு நிற்றல்.

289 அன்போ டழுங்கும் அனைநீ யொருமுறை யாதரவாய்ப்
பொன்போல் விளங்கு புனக்கிளி யோப்பப் பொருத்தினை, யத்
துன்பார் பகலொரு தூங்குகை யானை துழவ, அதை
வன்போ டுரப்பிக் கடிந்தா ரவரை மறக்கலளே.

நற்றாய்க்குச் செவிலி யறத்தோடு நிற்றல்

290 பான்மணை மாறாச் சிறுமி படைத்த பருமதியை
யான்புகழ்ந் தேத்துத லெவ்வாறு? அறலி னெழுசினைமீன்
றான்பிறந் தன்றே மிதக்கவும், கன்று தரைவிழுந்த
தோன்றுட் பொழுதே நடக்கவுங் கற்றநன் னேன்பதுவே.

தேர்வரவு கூறல்

291 புலராது நின்ற பெரும்பொழு தெல்லாம் புல்லெனவிவ்
வலராத லர்ந்த பெருங்கடல்§ விண்மணி யல்லவெனச்
சிலரோ துறத்தெரிந்தோடினென் மட்பொற் * சிறகுடனே
நலகா தலருறு விண்தேர் பறந்து நணுகியதே.

* மட்பொற்சிறகு, அலுமினியப்பக்கச்சிறகுகள். பொன், உலோகமென்றது ஆகுபெயரால். § கடல், கடலில், அந்தரிட்சத்தில் 184-ம் செய்யுள் காண்க. விண்மணி, சூரியன்.

இதுவுமது

292 பருந்தொ டெருவைக ளரவா ரிப் பப் பலமரத்தின்
குருந்துகள் காலிற் களகள நல்லொலி கூட்டவிவ்வூர்
விருந்தயர் வீதிச் சிறுவர்க ளார்க்க விமானமது
கருந்துகட் பூமி யிறங்கி யுருளிற் கடுகியதே.

இவ்விரண்டு செய்யுட்களிலும் (விண்தேர்) ஆகாய விமானத்தின் (AEROPLANE) சிறப்புத் தோற்றுவித்தது காண்க.

மணமுரசு கேட்டு மகிழ்ந்துரைத்தல்

293 பூரண கும்பம் பொலிகஇல் முன்னர்ப் பொருந்துபல்பூத்
தோரணம் வீதிக டோறும் விளங்குக, சோதிமின்னென்
றூரண மோதுந் தெருக்களிற் காந்த விளக்கமைக;
தாரணி மூலத் தவள்மண மென்றது தண்ணுமையே.

ஐயுற்றுங்கலங்கல்

294 அறிவா னுணரப் படும்பொருள் யாவு மறிவெவையுஞ்
செறிவான் செயலெனத்தெள்ள திற்காட்டுஞ்சிலம்பு இதனில்
நெறிவான் முரச மியம்புதல் நென்னலீ னென்றுயாம்
முறிவான் புரிந்தவர்க் கோபிறர்க் கோயான் மொழிவரிதே.

நிதிவரவு கூறுநிற்றல்

295 தெய்வமுற் றுள்ளசா ரென்றுசென் றுற்றபின் றெய்வமெம
துய்வமைத் தெம்முளே யுற்றுள தோர்ந்தே உயாருளைப்
பெய்வனப் பேய்ந்துள உள்ளப் பொருப்பின்நம் பேரழகர்
மொய்வளச் செல்வங் கொணர்ந்தளித் தாரிம் முழுநிதியே.

வரைபொருட் பிரிதல் முற்றும்.

## 19. மணஞ் சிறப்புரைத்தல்.

மணமுரசுகூறல்

296 கல்லாத புல்லர் கதிப்பென வந்த களிறுகடிந்
தில்லாத சொல்லு முருகிய மோடுற வெம்மையளித்
தொல்லாத வர்உரம் பொன்ற வுடைத்தவ ரோங்குமுரா
செல்லா மடைந்தன மென்றிறும் பூதி னியம்பியதே.

மகிழ்ந்துரைத்தல்

297 யான்கொண்ட நன்முயல் வெய்திய தென்ன விருங்களியிற்
றூன்கொண்ட நற்றழை தன்னமும் வாடாத் தகைமைபுரிந்
தூன்கொண்ட நல்லுயி ராற்றி யதுவே யுயர்துணையாத்
தேன்கொண்ட நன்மணத் தம்மி மதித்துத் திகழ்ந்தனளே.

வழிபாடுகூறல்

298 பூவு மணமு மெனக்கலந் தாரிவர்; பொற்புமிக
மேவு மிருவ ருயிர்த்துணை யாயினர்; மெல்லியல்கண்
தாவு முழையி னிவர்தோள் பொருந்தும்; தடவகலம்
மாவின் வனத்திவள் வாழ விடந்தந்து மன்னுறுமே.

வாழ்க்கை நலங்கூறல்

299 அறிவொடு ஞான மணைந்தா லென,உன் அருமகளும்
அறிவனுங் கூடிய வாழ்க்கை யமைதி யதனையெணின்
செறிவுறு காட்சி யுலகத்து,* அனை, உன் சேடமெனப்
பெறுமொரு சத்தும் விளங்கிய தோற்றம் பிறங்குறுமே.

*அனை, அண்மைவிளி. நீயும் சத்தும் விளங்கிய தோற்றம் போலுமென்க.

காதல் கட்டுரைத்தல்.

300 நெஞ்சிட மன்றி யமர்த்தான் மலரினும்; நீள்பொழுது
துஞ்சுத லின்றிப் பரிப்பான் துயிலிடைத்; தூற்றசெழும்
பஞ்சிடை யின்றி நடக்கவிடான் பதம்; பல்லணிகள்
அஞ்சுவன்மெய்க்குப்பொறையாமெனஅவன் அன்பும்எனே.

கற்பறிவித்தல்.

301 காதலன் றன்குண மன்னது வாகக் காதலன்மாட்
டோதுநங் கற்பா சிக்குணம் முன்னின் உரைதருமக்
காதல னன்றிமற் றோர்தெய்வ முண்மை கருதுவளன்று
ஏதிலர் தந்திறைக் கேகினு மில்லின்வல் லெய்துவனே!

கற்புப் பயப்புரைத்தல்

302 தெய்வந் தொழாரினைத் தெய்வ நெறிக்கட் செறிக்க,அவன்
உய்வந்த நன்னெறி மீதே வெளிச்சென் றொழுகுறினும்,
கைவந்த வின்னவள் கற்பின் வலியின் அவன்களிறு
நைவந்த * மெய்தும் வகையந்தி யிற்பந்தி நண்ணுறுமே.

*நைவு அந்த மெய்தும் வகை எனப் பிரிக்க.

மருவுதலுரைத்தல்.

303 இல்லுள போதும் அவரிலா வேளையும் இன்னர்உளம்
சொல்லொடு காரிய மாதிய கண்டவர் சொல்லுதல்காண்,
மல்லுட னின்னார் மருவிய கூட்ட மகிழொலிதா
னில்லிட முற்று மொலிக்கும்; பிரிவே யிவர்க்கிலையே.

கலவியின்பங்கூறல்

304 ஒன்றெனக் கூறு திரண்டன் றெனும்உரை உண்மையினை
இன்று எனக்கு ஊட்டினார் இன்னவர்; யாதென் றியம்புவதே
சென்று பாந்த உளநீ ரொருங்கியிங் கின்பவெளத்
தொன்று மமைதி யுணர்வதற்கு ஈருட லொத்ததுவே.

மணஞ்சிறப்புரைத்தல் முற்றும்.

## இரண்டாவது மணவியல் முற்றிற்று.

# III. கற்பியல்.

இவ்வியல் மூன்று பெரும் பகுதி யுடையது:- 1 ஓதற்பிரிவு 2 அரசுவழிப் பிரிவு 3 பொருள்வயிற்பிரிவு என. பண்டைய கோவைகளிற்காணும் பரத்தையிற்பிரிவைக் கழிவழக்கெனஆசிரியர் கூறு தொழிந்தார்.

## 20. ஓதற்பிரிவு.

கல்வி நலங்கூறல்.

305 அருள்பெறு முன்ன ரடைந்த விடய வநுபவநூல்
இருள்பெறு முன்ன ருணையடைந் தெய்தினர்; இன்னருளம்

வெருள்பெறு முன்ன முழுவுணர் வுற்று வெகுளிமுதற்
றெருள்பெறு மூன்றும் ஒழிந்து தெளிவிற் செறிகுவரே.

பிரிவுநினைந் திரங்கல்.

306 வெற்றுரை யாகமுற் சுற்றன வேறு மிகுதிபடு
நற்றுறை சார்ந்த பொருளொ டுறுவதை நாடியறிந்
திற்றுறை நின்றரு ளெம்மா னடிச்சுவை யெய்திவாப்
பற்று(உ)றை கொண்டு படர்ந்தா ருனதுதோள் பற்றினரே.

கலக்கங் கண்டுரைத்தல்.

307 எண்கலங் காமுறை யேத்தி யிறைவன தின்னருளை
மண்கலங் காவகைப் பெற்று மகிழ்வின் வதியலரிற்
பெண்கலங் காநிற்ப ளென்ப தறியார் பிழைபடவே
கண்கலங் காநெறி காக்காத தெண்ணிக் கலங்குவளே.

வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தல்

308 தலைப்படக் கூடிய வன்றே பிரிவிற் றணந்தனம்யாம்
அலைப்படு முள்ளங் கவலொழி யென்றவர் அன்பாகம்
*கலைப்பட வொட்டா தருளிற் கலந்து சடவறியாது
உலைப்படு பொன்னி னுறைவோ* னெறியி னொழிந்தனரே.

*கலைபட இடை மிகுத்தது. *உறைவோன், கடவுள்,
உறைவோனது நெறியினின்றும் ஒழிந்தனர் என்க. அன்பருள்ளம் கலைவுபடாது உலையிலிட்ட பொன்போல அவ்வுள்ளத்தில் அருளோடு கலந்து என்றும் பிரியாமல் நிற்கும் தன்மை இறைவனதாகும் அந்நெறியைத் தலைவர் விட்டொழிந்தனரெனத் தலைவி வருந்தினள் என்க.

ஓதற்பிரிவு முற்றும்.

## 21. அரசுவழிப்பிரிவு.

பிரிவறிவித்தல்.

309 காத்துங் காந்துங் கடைமுறை யன்னவை கண்டுயிலப்
பார்த்தும் பரிந்து விளைப்பவன் இன்னருள் பற்றி,யுலகு
ஏத்தும் வகைநமர் காவலிற் செல்லுவா னெண்ணுகின்றார்,
சோத்தம்படத்துதித்தேத்தினர்தோய்வளச்சொற்கொடியே.

பிரிவுகேட்டிரங்கல்.

310 வாராது வந்தவப் பேரிட ரோட்டி வளப்பொலியப்
போராது நின்றெனைப் பண்டு பரிந்து பெரிதளித்த
போரா தாவிற் பெரியவ ரின்றெனைப் பேர்ந்து பரிந்
தோராத் துயர வளக்க ரமிழ்த்துவா னுன்னினரே.

பிரிவுகூறல்.

311 அயனின்ற நாடுகளாறுத லுற்றுஅவற் றூர்ந்தசனர்
மயனின்று நீங்கியுட் டேறுத லோடு மருவினன்றே
இயனின்ற வின்ப வகச்சுவை யென்றும் இயைவுபெறும்!
கயனின்ற செங்கமலத்துறை வள்ளைக் கனவியலே,

வருத்தந் தணித்தல்.

312 எள்ளு மிழுதும் பிரியா வகையின் இலங்கிழை,உன்
உள்ளும் புறப்பு மொளித்தவன் சக்தி யொருபொழுதும்
கொள்ளும் பிரிவுல கத்திலென் மாற்றங் குலவலிலை,
அள்ளுங் கனற்பிழம் பார்ந்த வறவின் * அலறலேயே.

இலங்கிழையே! ஒளித்தவனது சக்தி ஒரு பொழுதும் உலகத்தில் பிரிவுகொள்ளும் என்னும் மாற்றம் (சொல்) குலவுதலில்லை என்க. வகையின் வகையைப்போல. * கொள்ளி சுட்ட நீர் சத்தமிடுவதுபோல.

பிரிந்தவை கூறல்.

313 எல்லைப் புறத்தி னகழ்ந்த * குழிநெடு கேய்ந்துபல
தொல்லைப் படுத்து வெடி குண்டெறிந்து தகளுறவே
வல்லைப் படுக்கும் பகைவரை வாட்டுவான், ‡மாது,நமர்
ஒல்லைப் படையொடுஞ் சென்றார் வினைவை யுரைக்கரிதே.

* குழி - Trenches. ‡ மாது, தலைவியை விளித்தபடி.

பிரிவாற்றாமை கார்மிசைவைத்தல்.

314 தனிய விலக்கித் துணைவி னிருவருந் தோயும்வகைக்
கனியு மருளைக் கடுகிற் றருமின் கனல்*கனமும்
'முனியும் பகைவரை முற்ற வடக்கி முறைநொடித்துந்
தனிய விருப்பதென், இல்புக' என்பதிற் சார்ந்திடுமே.

*கனம், மேகம்.

வானோக்கிவருந்தல்.

315 ஒத்த மனத்தி னிருவோ ரொருவரை யுண்ணினைந்து
சித்தங் கருதிய வப்பொழு தேயவர் தெய்வவுள
மொத்துக் குலவுதல் கண்டாம், தனியிரு ளூற்றநுதற்
கித்தரை யென்றனிப் போதா வேதா மியம்புகவே.

கூதிர்கண்டுகவறல்

316 மெய்ப்பனி தந்து விளம்புட லார்த்துற மேதினியிற்
பொய்ப்பசப் பேற்றி யிறுகத் தழுவுவான் பூட்டுபுயல்,
நெய்ப்பொடு குன்றி னெதிர்ந்து தலைக்கீழ் நெடும்புனலை
யுய்ப்பது போலத் தமியளைப் பார்க்கும் உடைபடவே.

முன்பனிக்கு நொந்துரைத்தல்.

317 அம்பர மோங்கிய மட்டை நுனிக்க ணருங்குடம்பை
கட்புஅர ளுக்கிய புட்களும் பிள்ளை நனிதழுவித்
தம்பரங் காக்கும் பனிபெய் யிருளிற் றனிதுயர்வான்
இம்பர் அங்காந்தவாய்கைத் தூண்டுபெறத்தாய் இருந்தினளே.

பர^, பாரம்.

### பின்பனி நினைந்திரங்கல்

318 தருக்கநூல்கொண்டுபலவகைநேர்மைசமைத்து. அவற்றிற்கு
உருக்கநூல் பெய்து, மகளிரைப் போல்வற் புறுத்தி, மதம்
அருக்கன் நூல்தந்த திதுவெனப் பாரித் தறைகுவதிற்,
சுருக்கநூல் நுண்ணிடை வாடப் பெரும்பனிதோன்றுவதே.

உருக்கநூல், பக்தி நூல். மதம் உருப்படுத்துவோரது முறையை பனியின் படர்ச்சிக்கு உவமை காட்டினார். மதநூல் இது அருக்கன் (பாஸ்கரன்) தந்தது எனப்பாரித்துரைப்பது போல என்க.

### இளவேனில்கண் டின்னலெய்தல்.

319 பிழைக்கும் வகையிலை, சூதந் தளிர்த்தது, பேரொலியின்
அழைக்குங் குயிற்குரல் சுருவ துள்ளம், அநங்கனது
குழைக்குங் கரும்பு சுரும்போ டியைந்து குலநலங்க
ளிழைக்கும் பொறியெலாங் கொல்லுத லிங்ஙனியம்பரிதே.

### பருவங்காட்டி வற்புறுத்தல்.

320 'வருத்தம் பொறுக்கரி தாயவன் றே அதன் வன்மைகெடத்
திருத்தம் பொருத்து மிறைவன்' என் னோர்மனஞ்சேர, எதிர்
நிருத்தஞ் செயுமுகில் கார் காட்ட லின்று, நிறைமுதல் பண்பு
அருத்தம் படவொழு கன்னவர் தேர்வல் அணைகுறுமே.

### பருவ மன்றென்று கூறல்.

321 காரெனச் சற்றும் மனங்கவல் கொள்ளல், களிறுபிளிறு
ஏரெனப் பூமி யகடு குமுற, வெரிமலைவாய்
பாரினிற் செங்குழம் பூற்றுதல் மின்னிற் பரிந்தறியாய்;
ஊரெனத் தோன்று முயர்விண் ணகர * மொருமயக்கே.

* விண்நகரம், மேகம்.

### மறுத்துக்கூறல்.

322 விண்ணுறு கந்தருப் பந்நகர் * மாலெனின், மேதினியிற்
கண்ணுறத் தோன்றுங் கமலம் பகலினிற் கண்முகிழ்க்க
நண்ணுறும்; அல்லிமலர்வெதென், ‡ தோன்றி நகைபடலென்
தண்ணுறு கார்ப்பனிப் பெண்மெய் பழகலென், சாற்றுகவே.

* கந்தருப்பந்நகர்-கந்தர்வ நகரம், மேகம் என்க. முற்செய்யுளில் விண்ணகரம் என்றதனை ஈண்டு விளக்கியபடி ‡ தோன்றி-மாருதோன்றி, மருதாணி என்னும் உலகவழக்குச்செடி. நகைபடல், பூத்தல்.

### தேர்வரவு கூறல்.

323 கொண்ட லிருட்டுடன் கூதிர் நடுக்கையுங் கூர்ந்துளங்கொண்
டண்டர் பிரானரு ளில்லவர் யான வடிக்கடிநீ
மண்டு துயர மனத்துட னெண்ணி மறுகல்; நிற்குப்
பண்டுஅளி செய்தவ ரின்றுதந் தேரிற் பரிகுவரே.

வினைமுற்றி நினைதல்

324 இருள்படு பல்பகை செற்ற வுளத்தி னிருளிரியத்
தெருள்படு மொய்ம்பி னருளை யடைந்து தெளிவையுறீஇ
மருள்பட லப்பகை முற்றவு மோட்டி மருவியபின்
அருள்படுமொண்டொடி கண்ணெதிர்மீண்டு மடைகுவனே.

நிலைமை நினைந்து கூறல்

325 மலையா வருட்கட வுட்பேற்றி னெய்தி மருவினர்க்கு
நிலையாப் பிறப்பெனச் செல்லுக தேரிவ ணின்றவர்பால்;
கலைஞான மோங்குறக் கண்ணகன் ஞாலங் கடுகளவின்
நிலைமாறு மென்றதுஉன் னைவலி காட்டு நியமமதே.

முகிலொடு கூறல்

326 பிரியா வகைப்பிரிந் துய்யக்கொண் டோனருள் பெற்றவர்கள்
சிரியா வகையாண் காத்தல் கடனெனச் செய்யவர
சிரியா வகைப்பகை முற்றினம், வெற்றி யியைந்தனம்; தேர்
திரியா வகைநகர் சேருமுற் பெய்யல் செழுமுகிலே.

வரவெடுத்துரைத்தல்

327 உள்ளன் பெழுந்து விரிந்து முகிலென வூற்றெடுத்துக்
கொள்ளும் அருளி னுலகத் துயிர்நனை கொண்டனையாய்,
துள்ளும் பகைவரை வாட்டிக் களப்பொரு டோய்ந்து,பலர்
விள்ளும் சிறப்பிற் றிறையொடு மன்னர் விரைந்தனரே.

மறவாமைகூறல்

328 நீர்க்குடத் துற்றவத் தாதி மனமென, நீள்பகைவர்
ஆர்ப்பரித் தோங்கிய வெம்முனைக் கண்ணும் அகவுளத்தின்
0வேர்ப்பரிந் துற்றிலள் மேதகு கிள்ளை விழைமொழியென்
*பார்ப்பன ளோர்கணம், பற்றிலான்‡மெய்யெனும் பான்மொழியே.

0வேர்ப்பறிந்துறல்-முற்று நீங்கி நிற்றல். *பார்ப்பு அனள் என்றூர் ஆராமை மேலீட்டால். ‡பற்றிலான் -ஈசன்.

அரசு வழிப்பிரிவு முற்றும்.

## 22. பொருள் வயிற் பிரிவு.

வாட்டங்கூறல்

329 'முனிவரு மன்னரு முன்னுவ பொன்னால் முடியுமென'த்
தனிவரு னோ முரைத்திடக் கேட்ட தளர்நடைதான்
இனிவருந் துன்ப மிதுவோ வெனக்கணீ ரெய்தவுளம்
பனிவர நின்றுள் பகர்வதென் னேதுணைப் பான்மொழியே.

பிரிவு நினைவுரைத்தல்

330 செல்வமில் லார்இகத் தோடு பரமுஞ் செறிதலில் என்று
எல்வரு மெல்லைக்கு முன்னர்ச் சென்றூர்பொரு ளேய்ந்ததுறை
வல்விரைந் தெய்துவ னென்றே தலைவர்; மனங்கொளல்நீ,
இல்விழைந் தோம்பவு மன்னது வேண்டும் இதுவுணரே.

ஆற்ருது புலம்பல்

331 நகங்கொண்டு கிள்ளு முளையைப் பெரிய நவியமெடுத்
தகங்கொண் டடித்ததை யொப்ப, வருநெறி யன்னவர்தாம்
முகங்கொண்டு சென்றன ரென்றசொ லென்றலை முட்ட,என்கண்
அகங்கொண்ட வஞ்சன மழியக் கொதிநீ ரகற்றுவதே.

ஆற்ருமை கூறல்

332 புணர்ச்சி பழகுதல் வேண்டா வெனுமெய் பொருந்திலனா
யுணர்ச்சி யறியா தபசகு னந்தா வுன்கணிணீர்
துணர்ச்சிறு பூவி னுதிர்த்தனை யென்னிற் றுறைவர்பொரு
ளுணர்ச்சி வலிக்கத் துணைவதென் ளுகு முரைநாவே.

திணைபெயர்த்துரைத்தல்

333 காது குளிரவெ னுள்ளங் குளிரக் கதுமெனமுன்
ஓது முடலோ டுயிர்குளிர் கொள்ள வுரைத்தமொழி
தீது படமறந்து ஓர்தனி வேற்று நெறிபடர்ந்தோ
யாதும் பயன்றரா வெற்றுப் பொருளெற் கிறுப்பதுவே.

பொருத்தமறிந்துரைத்தல்

334 சீவர்க ளோத்தச் சடங்கள் பெருமை தெரிப்பநனி
யாவரு மெண்ணி யறியா வொருவ னெழில்புகழை
மேவரு பாவர்க டோயுந் துயர்நெறி * மெல்கு கடம்
போவர் நின் காதலர் ஆதலின் என்நாம் புகல்வதுவே.

* துயர் நெறியையும் மென்மையதாக்கும் சுரநெறி என்பது பொருள்.

பிரிந்தமை கூறல்

335 இனிநா மெடுக்குநற் பேற்றுட னில்லை யெனநமக்குத்
தனியா யருள்தந்து, உயரறிவு எண்ணிய சாதிப்பதற்கு
இனிதா யமைத்தவன் சக்தி யெனவா ழிளங்கொடியே,
பனிமீயாது வைகலிற் சென்று ரிறைவர் பரியிசையே.

இரவுறுதுயரத் திரங்கியுரைத்தல்

336 பகல்போ லலப்,பலர் தம்மொடும் பேசிப் பயில்பொழுது
நிகழ்போழ்து தன்னமும் போவதோ ராது நிலையில்உளம்
துகள் சேரு மெய்வருத் தந்தெரியாத துறைபெறலாம்;
மகள்சோக மெங்ங னிரவிற் கடப்பாள் வருக்கரிதே.

இகழ்ச்சி நினைந்தழிதல்

337 கைப்படு நற்பொருள் காட்டும் பெருமையைக் காணரியார்
மைப்பட வேசுவர் நெறியல் நெறியினின் வையமதின்
உய்ப்பவர் யானப் பிரியா ரெனவிகழ்ந் துற்றனன் யான்;
எய்ப்பினி லென்னயர்ப் பெண்ணு தகன்று, ரினைத்தனனே.

உருவு வெளிப்பட்டுநிற்றல்

338 பரந்த வுலகிற் சிறந்த பொருள்கள் பலபரக்க
விரிந்து பழகினுங் காண்பவற் றெல்லாம் விரிகயலும்

பரிந்த மதியும் பருவத் திணைந்த பயோதரமும்
சுரிந்த சுழியொடு கூடு மிலக்கயர் தோன்றுறுமே.

நெஞ்சொடு நோதல்

339 இல்லவ ருள்ளபோ தெண்ணிப் பொருடர வேகியவென்
நல்லக நெஞ்சே, நடுவழிக் கண்ணனி நைவடைந்து
சொல்லக நாடிச் செலவொழிந் துற்றனை; சொல்லுக நீ
இல்லவள் மாட்டோ பொருட்டோ செலவெண்ணியதே.

நெஞ்சொடு புலத்தல்

340 நம்புதற் கேற்ற குணமொன்று மில்லா நடலையினை
வம்பினிற் சேர்த்துவன் றிருண்டாக் கியமெய் * வலியனளை
இம்பரிற் கூடிடிற் பேயும் பிரியா தெனல் மறந்து
வெம்பரற் சேய்க்கடஞ் சேர்ந்தாய் தகாததுன் மெய்யுறவே.

* வலி அன்னளை, ஸத்தின் பலம் போன்றவளை.

நெஞ்சொடு மறுத்தல்

341 உண்மைக் கறிவிற் கொருபொருள் மொய்ம்புளர் உருவெடுத்துப்
பெண்மைக் குணம்பெற் றனைபொன் விடுத்துப், பெரிதுமய
லெண்மைக் குணந்தரு பொன்னினைத் தேட இயங்குவனன்று;
அண்மைப் படுநாற் பொருளவள் நீத்தோ அகமகிழ்வே!

நாளெண்ணிவருந்தல்

342 உள்ளத் துவகை துளும்ப வுவந்த வுயிருடலை
மெள்ளச் சுவைக்க வறியார் வருத்த மிகப்படுத்தும்
உள்ளத் தினரின், மழைக்கண் அறலுக, ஆங்குசென்றார்
கள்ளத் தொழிந்து வருநாள் விரலெணிக் கன்றுவதே.

பருவங்கண்டிரங்கல்

343 சூதந் தளிர்த்தது, கோகிலங் கூவிற்றுத்; தூயதென்றல்
ஏதம் படப்பல வின்ப வுணர்ச்சி யெழுப்பியது;
சீதம் படுபிறை யந்திவாய்ச் செக்கர்த் திகழுமுகில்
ஓதம் படத்தனி நின்றவ ருள்ள முருக்குவதே.

இதுவுமது

344 வானங் கவிந்து கறுக்கப் படல மழைமுகில்கள்
மானந் தரும்இடி தன்னை முழக்க மயிற்குலங்கள்
தானம் விரிந்த கணச்சிறை யோடு தனிநடிக்க
ஏனை யுயிர்க ளொடுங்கும் குளிர்க்கு அவள் என்படுமே.

முகிலொடுகூறல்

345 துயர்க்கா ரணமறி யாது துயரத் தொடக்கறியாது
அயற்கா ரணம்கொடு தெய்வ மழைப்பான் அரும்கிரியை
மயற்கா ரணத்தான் வகுத்து, அது போற்றுறு மாநகருக்கு
இயற்கா ரெனினுமென் முன்செலவொட்டேனி தெண்ணுகவே

தேர்வரவு கூறல்

346 உடலும் பொறியும் வெறியுற்று நிற்க; உயர்மனக்கா
னடவிற் றனதகங் காரத்து மெய்யடக் காதொழுக,
மடமீக் கறிவுதன் போத மிழக்க, மதிமையொடு
கடவு ளருளவற் பற்றலிற், செல்வன்றேர் கண்ணுற்றதே.

இளையரெதிர் கோடல்

347 சிந்திப் பவர்பலர் சிந்தித்து நிற்கவச் சிந்தனைக்கு
முந்தித் தெரிந்தெதிர் சென்றிடு மூழின் முறைமையெனே!
அந்திப் பிறைநுத லாள்அவள் ஆவி யகலுமுனர்
வந்திப் பவரெதிர் கொள்வான் வளத்தின்வந் துற்றனரே.

உண்மகிழ்ந்துரைத்தல்

348 பொருளொன்று நாடிப் புகுகாத கானம் புகுந்துபினர்
அருளொன்று நன்னெறி யூடே திரும்பி யருமைபெறத்
தெருளொன்று கூட வடைந்தது, இவளுளந் தேர்ந்துடலின்
மருளொன்று நீங்க வணைந்த மகிழ்வாய் மருவியதே.

படன்கட்டுரைத்தல்

349 தெய்வந் தெரிய வுலகோ ரறியச் செறிந்து, மண
மெய்திப், பினர்அறம் தோற்றும் இகபர வேற்றமுறப்
பெய்த வளந்தரு மேட்டிமை யுற்றுப் பிறங்கும்அகத்
தெய்திய காதற் பலனென்றும் ஓர்திறத் தேய்ந்ததுவே.

பொருள்வயிற் பிரிவு முற்றும்.

மூன்றாவது கற்பியல் முற்றிற்று.

ஜகதீசனது வல்லமை மக்களிடத்து நித்தியமாகப் பதியும் உண்மைநெறியைக்காட்டும் இச் சத்தி நிபாதக் கோவையும் இத்துடன் முற்றுப்பெற்றது.

———(*)———

உரிமையுரை

மண்ணு வதுசோழ மண்டல மென்று வழங்குதலத்
தெண்ணுர்குறிச்சிலா லாப்பேட்டையேத்துகோ பாலனருள்
பெண்ணுய் மலாயத் தெனக்கருள் காட்டிப் பிறங்குறுமென்
கண்ணு ரிலக்குமிக் கிந்நூ லுரிமை கழறினனே.

லாலாப்பேட்டை திருச்சிக்கு மேற்கணுள்ள ரயில்வேஸ்டேஷன். கோபாலன், ஸ்ரீமான் கோபாலய்யங்கார், மலாய மென்றதனுல் அதன் தலைநகராகிய கோலலம்பூர், கோலஸிலாங்கூர் இவற்றைக்கொள்க.

MARAIMALAI ADIGAL LIBRARY

# சோதனை பத்திரம்.

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| முன்னுரை | 16 | சுற்பியலில் | ஒவ்வொரு இயலிலும். |
| 52 | 3 | சம்பின் | தம்பின் |
| 54 | 2 | னுரை மக | னுரைமக |
| 55 | 1 | நெறியுறைறயீர் | நெறியுரையீர் |
| 87 | 4 | றைவனுககே | றைவனுக்கே |
| 163 | 3 | சம்மிவள் | தம்மிவள்; |
| 235 | 2 | உன்னெறிக்கண | உன்னெறிக்கண் |
| 256 | 3 | சேயிழையாட்) | சேயிழையாட்(கு) |
| 269 | 4 | ஆரா | ஆரு |
| 273 | 3 | உளளம் | உள்ளம் |
| 274 | 2 | பறபல | பற்பல |
| 297 | 4 | மதித்து | மிதித்து |
| 299 | 3 | உன் | உன்றன் |
| 301 | 1 | வாகக் | வாகனுக் |
| 305 | 4 | றெருள்பெ ரு | றெருள்பெரு |
| 320 | தலைப்பு | பாவங் | பருவங் |

THE "ANANDA" PRESS.
PRINTERS,
166, SEA STREET,
COLOMBO.

இந் நூல் கிடைக்குமிடங்கள்:—

1. சரஸ்வதி புத்தகசாலை,
70, செட்டித்தெரு, கொழும்பு.

2. நவீன கதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி,
(40-வது கல்லி மூலை,)
இரங்கோன், பர்மா.